# பொன் மொழி வாசகம்

## (நான்காம் புத்தகம்)

ஆசிரியர்கள் :

**புலவர் பு. செல்வராசனுர்,**
தலைமைத் தமிழாசிரியர்,
சி. அப்துல் ஹகிம் இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி,
சென்னை.

**ஆபிரகாம் அருளப்பன்,** B. A.,
தமிழ்த்துறைத் தலைவர்,
அர்ச். சேவியர் கல்லூரி, பாளையங்கோட்டை.

பதிப்பாசிரியர் :

**சு. சே. உமாபதி,** M. A., L. T., (Dip. in. Geog.)
தலைமையாசிரியர்
சி. அப்துல் ஹகிம் இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி,
சென்னை.

சித்ரா பப்ளிஷிங் ஹௌஸ்
ஸ்ரீ வைகுண்டம்

பதிப்புரிமை] 1954 [விலை அணு 10

முதற் பதிப்பு 1954

Printed at the B. N. Press, Mount Road, Madras.

# முன்னுரை

'பொன் மொழி வாசகம்' என்னும் பெயரோடு வெளி போதரும் தமிழ் வாசக வரிசையில் இது நான்காம் புத்த மாகும். இது 1941-ஆம் ஆண்டில் அரசியலார் வெளியிட்ட பாடத் திட்டத்தைத் தழுவி எழுதப் பெற்றுளது. இதன் கண் 700 புதிய சொற்கள் இடம் பெற்றுள்ளன. மொழி போதனையில் முக்கியமாகக் கருதப்படுவது மொழி பயிற்சியேயாகும். இப்பயிற்சிக்குப் போதிய வாய்ப்பளிக் கும் முறையில் இதன்கண் பல்வேறு வகையான ஓவியங் கள் தரப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் அவற்றைப் பயன் படுத்திக் கொள்வது இன்றியமையாததாகும்.

ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் மொழியறிவு ஆக்கமுறும் வகையில் பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. இப் பயிற்சிகள் அனைத்தையும் குழந்தைகள் செய்யுமாறு தூண்ட வேண்டுவது ஆசிரியர் கடமையாகும். அன்றியும் வகுப்புக்கு ஏற்றவையாகச் சில இலக்கண பாடங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

சிறுவர் சிறுமியர்க்கு இன்பமூட்டத்தக்க இனிய எளிய பாடல்கள் இதன்கண் சேர்க்கப்பட்டுள்ளன. இப் பாட்டுக்களைக் குழந்தைகள் மனப்பாடம் செய்வது நல மாகும். இதன்கண் சேர்க்கப்பெற்றுள்ள பாடங்கள் சிறு வர் சிறுமியரின் தமிழறிவையும், பொது அறிவையும் வளரச்செய்யும் என்பது உறுதி. அறிஞர்கள் தமிழ்ச்சிறுவர் சிறுமியர்க்கு இந்நூல் பயனளிக்குமாறு செய்வார்கள் என முற்றிலும் நம்புகின்றோம்.

சென்னை
7-11-54.

ஆசிரியர்கள்.

# பொருளடக்கம்


| எண் | பாடம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தாய்நாடு (பாட்டு) | ... | 1 |
| 2. | தமிழும் தமிழகமும் | ... | 2 |
| 3. | புலவர் வறுமை | ... | 6 |
| 4. | அப்பம் திருடிய எலி (பாட்டு) | ... | 11 |
| 5. | மௌன வாசிப்பு—I | ... | 13 |
| 6. | இளைஞர் சங்கம் | ... | 15 |
| 7. | உலோகங்கள் | ... | 20 |
| 8. | தென்னையும் பனையும் | ... | 24 |
| 9. | பனைமரம் (பாட்டு) | ... | 28 |
| 10. | தெனாலிராமர் செய்த வேடிக்கை | ... | 30 |
| 11. | நூல் நிலையம் | ... | 33 |
| 12. | நவராத்திரி | ... | 37 |
| 13. | ஒட்டகம் | ... | 40 |
| 14. | பாலைவனத்து மக்கள் | ... | 44 |
| 15. | திருக்குற்றாலம் | ... | 48 |
| 16. | ஆறு | ... | 52 |
| 17. | மௌன வாசிப்பு—II | ... | 54 |
| 18. | மான வீரன் [நாடகம்] | ... | 56 |
| 19. | நீரைக் கடத்தல் | ... | 65 |
| 20. | முரசுப் பாட்டு | ... | 70 |
| 21. | மாமல்லபுரம் | ... | 72 |
| 22. | கடிதத்தின் பிரயாணம் | ... | 76 |
| 23. | மனிதருள் மாணிக்கம் | ... | 79 |
| 24. | மௌன வாசிப்பு—III | ... | 83 |
| 25. | பறவைகள் | ... | 85 |
| 26. | தாமஸ் ஆல்வா எடிஸன் | ... | 89 |
| 27. | நாட்டுப் பொது வாழ்த்து | ... | 93 |
| | **செய்யுட் பாடங்கள்** | | |
| | 1. கடவுள் வணக்கம் | ... | 94 |
| | 2. மூதுரை | ... | 94 |
| | 3. நல்வழி | ... | 96 |
| | 4. குறத்தி பாட்டு | ... | 99 |
| | 5. விவேகசிந்தாமணி | ... | 99 |

# 1. தாய்நாடு

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலவி
இருந்ததும் இந்நாடே !—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே !—அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே !—இதை
வந்தனை கூறி மனத்தில் இருத்திஎன்
வாயுற வாழ்த்தேனோ ? (1)

*–பாரதியார்*

படையாமல் உண்ணாத தமிழ்நாடு வாழ்க !
பகையாரும் எண்ணாத தமிழ்நாடு வாழ்க !
அடையாத துன்பங்கள் அவைவந்த போதும்
அநியாயம் எண்ணாத தமிழ்நாடு வாழ்க !
கொல்லாமை உயர்வென்னும் தமிழ்நாடு வாழ்க !
கொடைவள்ளல் பலர்நின்ற தமிழ்நாடு வாழ்க !
இல்லாமை அறியாத தமிழ்நாடு வாழ்க !
இரவாமை அறமென்னும் தமிழ்நாடு வாழ்க ! (2)

*–நாமக்கல் கவிஞர்*

### அரும்பத உரை

*(1)* எந்தை-எமது தந்தை, குலவி-நட்புற்று, முந்தையர் - முதாதையர், சிந்தை - மனம், வந்தனை - வணக்கம், இருத்தி-வைத்து, வாயுற-வாயார.

*(2)* படையாமல்-கொடுக்காமல், வள்ளல்-அளவின்றிக் கொடுப்பவன், இல்லாமை - வறுமை, இரவாமை - பிச்சை எடாமை.

# 2. தமிழும் தமிழகமும்

1. உலகில் வாழும் மாந்தர் பல மொழிகளைப் பேசுகின்றனர். நாம் வசிக்கும் இந்தியாவிலும் பல மொழிகள் வழங்குகின்றன. தென்னிந்தியாவில் முக்கியமாக வழங்கும் மொழிகள் ஐந்து. அவை தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு என்பனவாகும். இவற்றுள் துளு என்னும் மொழிக்கு எழுத்துக்கள் இல்லை. அம்மொழி பேச்சு வழக்கில் மட்டும் உள்ளது. மற்ற நான்கிற்கும் எழுத்துக்களும், இலக்கண இலக்கிய நூல்களும் உள்ளன.

2. தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்ற மொழிகள் ஆதியிலிருந்தது போல இக்காலத்தில் இல்லை. அக்காலத்தில் அம்மொழிகளில் தமிழ்ச்சொற்களே மிகப் பலவாக இருந்தன. இக்காலத்தில் அவை சம்ஸ்கிருத மொழியைப் பின்பற்றி இலக்கண இலக்கியங்களைப் பெருக்கிக்கொண்டன. ஆதலால், இக்காலத்தில் அவற்றில் தமிழ்ச் சொற்கள் சிலவே வழங்குகின்றன. ஆயினும், அவை தமிழ் மொழியின் வழி வந்தவை என்பது நன்கு புலனாகும்.

3. தமிழ் மொழி வழங்கும் நாடு தமிழ்நாடு என்பர். இதனைத் தமிழகம் என்றும் கூறுவர். தமிழகம் ஒரு காலத்தில் இந்தியாவுக்குத் தெற்கே வெகு தூரம் கடலில் பரவியிருந்தது. கன்னியா குமரிக்குத் தெற்கில் இருந்த நிலப்பகுதி கடலில் மூழ்கி விட்டது. எனவே தமிழகம் வடக்கே வேங்கட மலையையும், தெற்கே கன்னியா குமரி முனையையும், கிழக்கிலும், மேற்கிலும் வங்காளக் குடாக்கடலையும், அரபிக் கடலையும் எல்லைகளாகப் பெற்று விளங்கியது.

4. தமிழகத்தில் உயரமான மலைத்தொடர்களும், பேராறுகளும் இருந்து வளம் செய்கின்றன. நாகரிகம் என்பது தமிழகத்திலிருந்து பல நாடுகளுக்குப் பரவிற்றென்று அறிஞர் கூறுவர். தமிழ் மொழி மிகவும் தொன்மை வாய்ந்ததும், பண்பட்டதுமாகும். இன்று




மிகப் பழமையான நூலாக நமக்குக் கிடைத்துள்ளது தொல்காப்பியம் என்னும் நூல். இந்நூல் கிறிஸ்துவிற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய நூல் என்பர். எனவே தொல்காப்பியம் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய நூல். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் உலகில் மற்றப் பாகங்களில் மக்கள் நாகரிகமற்று விலங்குகளைப்போல வசித்து

வந்தார்கள். அக்காலத்தில் தமிழகத்தில் தமிழ் மக்கள் பழுத்த நாகரிகம் உடையவர்களாய் வாழ்ந்திருந்தனர் என்பது தொல்காப்பியத்தால் நன்கு விளங்குகிறது. ஆகவே தமிழகத்தின் பழமையும், நாகரிகமும் மிக மிகத் தொன்மையானவை.

5. தமிழகம் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, மூன்று முடி வேந்தர்களால் ஆளப்பட்டு வந்தது. **சேரநாடு** என்பதைச் **சேரர்**களும், **சோழநாடு** என்பதைச் **சோழர்**களும், **பாண்டிநாடு** என்பதைப் **பாண்டியர்**களும் ஆண்டு வந்தனர். இவர்களேயன்றிக் குறுநில மன்னர் சிலரும் வாழ்ந்தனர். இம்முடி வேந்தர் மூவரும் தமிழ் மொழியை நன்கு வளர்த்தனர். **தமிழ்ச் சங்கத்தை** ஏற்படுத்தித் தமிழ் மொழியைச் செப்பம் செய்து வளர்த்த பெருமை பாண்டியர்களுக்கே உரியதாகும். இம்முடி வேந்தருள் சிலர் தமிழ் மொழியை நன்கு கற்றுத் தாமும் கவி பாட வல்லவராய் விளங்கினர்.

6. அகத்தியர் என்ற முனிவர் தமிழ் மொழிக்கு முதன் முதலில் இலக்கணம் வகுத்தார். அவருக்குப் பன்னிரண்டு மாணவர் இருந்தனர். அம்மாணவர்களுள் சிறந்தவர் **தொல்காப்பியர்**. அவர் இயற்றியது **தொல்காப்பியம்** என்னும் இலக்கண நூலாகும். பாண்டியர்கள் அமைத்த **முதற்சங்கம்**, **இடைச்சங்கம்**, **கடைச்சங்கம்** என்னும் மூன்று சங்கங்களிலும் இருந்த புலவர் பலர், பற்பல நூல்கள் இயற்றினர். அவைகளுள் பல அழிந்தன. சில உள்ளன.

7. சங்க நூல்களைப் படித்தால் தமிழ் மக்கள் கல்வி, அறிவு, ஒழுக்கம், **தெய்வபத்தி**, **போர்**, கைத்தொழில், கலை என்பவற்றில் மிகச் சிறந்திருந்தனர் என்பது நன்கு விளங்கும். பலவகைக் கைத்தொழில்

களும், கப்பல் வாணிகமும், வேளாண்மைத் தொழிலும் தமிழகத்தில் சிறப்புற்று விளங்கின. மிகப் பழமையான தும், பண்டைக் காலம் முதல் நாகரிகத்தில் மிகச் சிறந்து விளங்குவதுமான தமிழகத்தில் நாம் பிறந்திருக்கிறோம். நம் தமிழகத்தை அதன் பெருமை குன்றாமல் காத்து வருதல் நம் கடமையாகும்.

அரும்பதங்கள்:—மாந்தர், மொழிகள், ஆதியில், வழி வந்தவை, தமிழகம், பேராறுகள், நாகரிகம், பண்பட்டது, பழமை, தொன்மை.

### பயிற்சி

விடை எழுதுக :

அ. தமிழ் மொழியின் வழி வந்த பிற மொழிகள் எவை?
ஆ. தமிழகத்தின் எல்லைகள் யாவை?
இ. தொல்காப்பியம் என்பது யாது?
ஈ. அதனால் நாம் அறிவது யாது?
உ. மூவேந்தர் யாவர்?
ஊ. அகத்தியர் தமிழுக்குச் செய்த தொண்டு யாது?

2. கோடுள்ள இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக:

அ. துளு மொழிக்கு——இல்லை. (இலக்கணம், எழுத்து, சொல்)

ஆ. தமிழ் நாட்டின் வடக்கு எல்லை——. (அகத்திய மலை, காவிரியாறு, வேங்கடமலை.)

இ. ———தமிழ் நூல்களுள் மிகவும் பழமையானது. (நன்னூல், திருக்குறள், தொல்காப்பியம்)

ஈ. முடிவேந்தர் மூவரும் ———வளர்த்தனர். (பகையை, தமிழை, படையை)

3. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுதுக:

பின்பற்றி—புலனாகும்—வளம் செய்து—அறிஞர்—தொன்மை—செப்பம் செய்து—வல்லவர்—கலை

# 3. புலவர் வறுமை

1. தென்னாட்டில் சிவகங்கைக்கு அருகில், சிற்றூர் ஒன்றில் செந்தமிழ்ப் புலவர் ஒருவர் இருந்தார். அவர் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றவர். செய்யுள் இயற்றுவதில் மிகத் திறமை வாய்ந்தவர். அவர் மிகப் பெரிய குடும்பத்தைக் காக்கும் பொறுப்பும் உடையவர். ஆனால் அவர் வறுமையால் வாடி வதங்கினார். வறுமையின் காரணமாக அவர், ஒரு நாள் திருடவும் துணிந்துவிட்டார். எங்குச் சென்று திருடுவது என்று யோசித்தார். அருகில் இருந்த சிவகங்கை மன்னர் வீட்டிலேயே திருடுவது எனத்துணிந்தார்.

2. மன்னருடைய பொக்கிஷசாலையில் உள்ள பணத்தைத் திருட அவர் நினைக்கவில்லை. அப்பணம் குடிமக்களால் அவர்கள் நலத்திற்குச் செலவு செய்யும் பொருட்டுக் கொடுக்கப்பட்டவை. ஆகையால் அரசியாரின் அணிகளுள் ஒன்றைத் திருடிக்கொண்டால், அதனால் அரசருக்குப் பெரிய நஷ்டம் உண்டாகாது என்று அவர் கருதினார்.

3. எவ்வாறு அரசியின் அணியைத் திருடுவது? அரசரும் அரசியாரும் அயர்ந்து நித்திரை செய்யும் காலத்தில், அரசியாரின் கழுத்திலிருக்கும் முத்துமாலையைக் கத்தரிப்பது என்று தீர்மானித்தார். அதற்காக அவர் அரசரும், அரசியாரும் உறங்கும் அறையைக் காத்து நிற்கும் காவலன் வீட்டுக்குச் சென்றார். அவனுடைய தந்தையும், தன் தந்தையும் அண்ணன் தம்பிகள் என்றும், தான் நெடுங்காலமாக வேற்று நாட்டில் வசித்துத் திரும்பி வந்ததாகவும் அவனுக்கு நம்பிக்கை உண்டாகும்படி பலமொழிகளைக் கூறினார்; அவனோடு சில நாள் வசித்தார். அவனோடு அரசர் அரண்மனைக்-

குள் சென்று அறிய வேண்டுவனவற்றை அறிந்து கொண்டார்.

4. ஒரு நாள் புலவர் காவலனை நோக்கி, "தம்பி, நீ தினந்தோறும் கண் விழிக்கின்றாய். நீ சில நாள் ஓய்வு கொள். நான் உனக்குப் பதிலாகச் செல்கின்றேன்." என்றார். அவனும் அதற்கு ஒப்புக்கொண்-



டான். அரசர் படுக்கையறையை இரவில் காவல் செய்யும் வாய்ப்புப் புலவருக்கு கிடைத்தது. சில நாட்கள் புலவர் காவல் தொழிலைச் செம்மையாகவே செய்து வந்தார்.

5. ஒருநாள் புலவர், கட்டிலின் கீழே ஒளிந்து கொண்டார். அன்று இரவு அரசரும் அரசியாரும் அறைக்குள் வந்தார்கள். அரசியார் கட்டிலில் அமர்ந்தார். கட்டிலுக்கு எதிரில் ஒரு சாளரம் இருந்தது. இந்தச் சாளரத்தின் வழியாகப் பார்த்தால், திருப்புவன நாதர் கோயில் கோபுரம் நன்கு தெரியும். அரசர் தமிழை நன்கு கற்றவர்; செய்யுள் இயற்றும் திறம் படைத்தவர். ஆதலால், அவர் தினந்தோறும் ஜன்ன-

லின் அருகே நின்று கோபுரதரிசனம் செய்வார் ; அப்போது ஒரு பாட்டைப் பாடுவார் ; அதன் பிறகுதான் உறங்குவார். அன்றும் அவர் வழக்கம் போல ஜன்னலின் அருகே சென்று கை கூப்பித் தொழுது நின்று,

*" தலையில் இரந்துண்பான் தன்னுடலிற் பாதி*
*மலைமகளுக் கீந்து மகிழ்வான்–உலையில் "*

என்றார். அதற்கு மேல் அரசர்க்குச் சொல் வரவில்லை. அரசர், 'உலையில், உலையில்,' என்று பன்னி பன்னிச் சொல்லிக் கொண்டே நின்றார். நேரம் கழிந்துகொண்டிருந்தது.

6. கட்டிலின் கீழ் ஒளிந்துகொண்டிருந்த புலவர் மனம் புழுங்கியது. பொழுது கழிவதை அவர் உணர்ந்தார். பாட்டு முடியாவிடில் அரசர் தூங்கமாட்டார் என்பதும் புலவருக்குத் தெரிந்தது. பொழுது விடிந்தால் தம் செயல் விளங்கிவிடும். அதனால் ஆபத்து உண்டாகுமே என்றும் அவர் பயந்தார். சொல்லை எடுத்துக் கொடுத்துப் பாட்டை முடித்துக்கொடுத்தால், அரசர் தூங்கினாலும் தூங்கலாம் என்று எண்ணினார். ஆனால் அவ்வாறு செய்தால் " **நுணலும் தன் வாயால் கெடும்** " என்பது போலல்லவா முடியும் என்று கருதினார். புலவர்க்கு என்ன செய்வது என்று தோன்றவில்லை. திருடனைத் தேள் கொட்டினாற்போலத் தவித்தார். விடிந்தால் எப்படியும் தாம் கண்டுபிடிக்கப் படுவது உறுதி. ஆதலால் அடியெடுத்துக் கொடுத்தால் 'அசரீரி' என்று நினைத்து அரசர் தூங்கினாலும் தூங்கலாம் என்று எண்ணினார். எனவே புலவர் துணிந்து அரசர் 'உலையில் உலையில்' என்றபொழுது " இருப்புவன மேனியர் என்றாலோ " என்றார். உடனே அரசர் " ஆமாம் திருப்புவன நாதர் திறம்," என்று பாட்டை முடித்தார்.

"தலையில் இரந்துண்பான் தன்னுடலிற் பாதி
மலைமகளுக் கீந்து மகிழ்வான்;—உலையில்
இருப்புவன மேனியான் என்றலோ ஆமாம்
திருப்புவன நாதர் திறம்"

என்று அரசர் மீண்டும் ஒரு முறை கூறி மகிழ்ந்தார்.

[பொழிப்புரை :—பிரம கபாலத்தில் பிச்சை எடுத்து உண்பவன், தன் உடம்பில் பாதியைப் பார்வதிக்குக் கொடுத்து மகிழ்பவன், கொல்லனது உலைக்களத்தில் காய்ச்சின இரும்பைப்போன்ற நிறத்தை உடைய உடலையுடையவன் என்று கூறினலோ திருப்புவன நாதர் தன்மை அதுவேயாகும்.]

பின்னர் அரசர் 'தடைப்பட்ட அடி எவரால் கூறப்பட்டது? எங்கிருந்து வந்தது?' என்று நிதானித்துப் பார்த்தார். தரையினின்றும் ஒலி எழுந்தது போல்



தோன்றியதாக உணர்ந்து, கட்டிலின் சுற்றுத்துணியை நீக்கிப் பார்த்தார். புலவரைத் தம் இரு கைகளாலும் பிடித்து இழுத்தார். அரசி 'திடும்'என எழுந்துநின்ருள். புலவர் உடல் நடுங்கிற்று. அவர் குவித்த கையுடன் நடுங்கி நின்ருர். அரசர் அவரைக் கட்டிலில் அமர்த்தி 'அஞ்சவேண்டா' என்று கூறிய பின்னரே புலவர் தம்

நிலை உணர்ந்தார். பின்பு அரசர், புலவர் வரலாற்றை விசாரித்தார். அரசர் புலவருடைய வறுமை நிலையையும், அவர் கொண்ட துணிவையும் கண்டு வருந்தினார். அரசர் புலவர்க்கு அவர் விரும்பி வந்தபடியே அரசியின் முத்து மாலைகளை அளித்ததோடு, மேலும் பல பொருள்களும் அளித்தார். புலவரைத் தம் அவைப் புலவராக்கி அரசர் சிறப்பித்தார். புலவர், வறுமைக் கடலினின்றும் கரையேறினார்.

அரும்பதங்கள்: இலக்கியம், இயற்றுவது, வறுமை, வாடிவதங்கல், பொக்கிஷ சாலை, அணிகள், கருதினார், காவலன், நம்பிக்கை, அமர்ந்தார், கோபுரம், கைகூப்பி.

### பயிற்சி

1. விடை எழுது:

அ. புலவர் எங்கே வசித்தார்?

ஆ. அவர் ஏன் திருடத் துணிந்தார்?

இ. புலவர் அரண்மனைக்குள் செல்வதற்குச் செய்த தந்திரம் யாது?

ஈ. புலவர் அரசனுடைய படுக்கையறையில் என்ன செய்தார்?

உ. அரசர், புலவர் தமது அறையில் இருந்ததை எவ்வாறு அறிந்தார்?

ஊ. அரசர் ஏன் புலவரைத் தண்டிக்கவில்லை?

2. கோடுள்ள இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்பு:

அ. புலவர் பெரிய குடும்பத்தைத் தாங்கும் ——— உடையவர். (வழக்கம், பொறுப்பு, பெருமை)

ஆ. புலவர் அரசியின் முத்து மாலையைக் ——— எண்ணினார். (வெட்ட, அறுக்க, கத்தரிக்க.)

இ. ஓர் இரவு புலவர் ——— அறியாமல் அறையில் ஒளிந்து கொண்டார். (மந்திரி, எவரும், அரசி.)

ஈ. கட்டிலின் கீழ் இருந்து ——— பிறந்தது. (குழந்தை, கன்று, ஒலி.)

3. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுதுக:

சிற்றூர் திறமை வறுமை—கருதினார் — சிறப்பித்தார்—ஓய்வு-சாளரம்-புழுங்கியது-நிதானித்து-சிறப்பித்தார்.



# 4. அப்பம் திருடிய எலி

[அப்பத்தைத் திருடிய எலி கீழ் வருமாறு நினைத்தது.]

நெய்யினில் சுட்ட பணியாரம்;—இது
நேர்த்தியாய்ச் சுட்ட பணியாரம்;
பையப்பை யக்கடித்(து) உண்பதற்கும்—வெகு
பக்குவமான பணியாரம். (1)

யார்க்கும் கிடையாப் பெருநிதியாம்;—இதை
யான்இன்று பெற்றதென் பாக்கியமே!
பார்க்கும் பொழுதேநீர் வாயினிலே—ஊறிப்
பாய்கின்ற தேபசி யாகின்றதே! (2)

[அச்சமயத்தில் சில எலிகள் சத்தம்
செய்ததைக் கேட்டு,]

என்னசத்தம் ஓஓ! தம்பிமார்கள்—கூடி
இங்கு விளையாட வந்தனரோ?
அன்னவர் ஓடி வருமுன்னே—யானும்
அப்பத்தைக் கொண்டு மறைந்திடுவேன். (3)

**[என்று எலி எண்ணிற்று. பின்,]**

யாரும் அறியாத மூலையிலே—அந்த
அப்பத்தை அவ்வெலி கொண்டு வைத்துக்
கூரிய பல்லால் கரம்பி ஒருபொடி
கூடச் சிதருமல் தின்றதம்மா! (4)

மட்டுக்கு மிஞ்சி புசித்ததனுல்—மூச்சு
வாங்கி வருந்தி வயிறூதிக்
கட்டப்படுவதைச் சுற்றத்தார் எல்லோரும்
கண்டொரு பண்டிதர்க் காளும்விட்டார். (5)

பண்டிதர் வந்துகை பார்த்தனர்;—அவ்வெலி
பண்டம் முழுதையும் உண்டகதை
விண்டதும் கேட்டுக் குறிகளும் நோக்கி
விதிப்படி ஆய்ந்து விளம்பினரே. (6)

அப்பம் முழுதும்நீ தின்றனையே!—அதை
அன்பிற் குரியஉன் தம்பியர்க்கும்
ஒப்பவே பங்கிட் டளித்திருந்தால்—துன்பம்
ஒன்றும்வந் துன்னை அணுகாதே!' (7)

அன்றியும் உன்தம்பி மாரும் கடும்பசி
ஆறிக் களித்திருப் பார்கள்அன்றோ?
இன்றினிச் செய்வதென்? இவ்வுலகம்—விட்டு
யாத்திரைபோவது திண்ணம் என்றூர். (8)

அளவு கடந்திடில் ஆரமுதும்—விஷம்
ஆகும் என்றுநம தான்றோர்கள்
உளபடி யேசொன்ன வாக்கியத் துண்மையை
உள்ளத்திற் கொள்ளுங்கள் தோழர்களே. (9)

*—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை*

### அரும்பதவுரை

1. பணியாரம்–ஒரு வகைத் தின்பண்டம், பைய–மெல்ல
2. நிதி–செல்வம், பாக்கியம்–அதிர்ஷ்டம்
3. அன்னவர்–அவர்கள்
4. கரம்பி–கடித்து, சிதருமல்–சிந்தாமல்
5. மட்டுக்கு–அளவுக்கு, மிஞ்சி–அதிகமாக. கட்டம்–துன்பம், சுற்றத்தார்–உறவினர், பண்டிதர்–வைத்தியர்.
6. கைபார்த்தனர் – நாடி பார்த்தனர், விண்டதும்–அறிந்ததும். விதிப்படி–சாஸ்திரப்படி, ஆய்ந்து–ஆராய்ந்து, விளம்பினர்–சொன்னர்.
7. அளிச்சிருந்தால்–கொடுத்திருந்தால், அணுகாது—நெருங்காது.
8. கடும்பசி–மிக்கபசி, களித்திருப்பார்–மகிழ்ந்திருப்பார், உலகம் விட்டு யாத்திரை போவது – இறப்பது, திண்ணம் - உறுதி.
9. ஆரமுது–தேவாமிர்தம், ஆன்றோர்–பெரியோர்.

### பயிற்சி

இப்பாட்டில் உள்ள கதையை எழுது.

# 5. மௌன வாசிப்பு—I

கீழ் வரும் கதையை மனத்துள் படித்து, வினுக்களுக்கு விடையெழுது :

1. ஒரு நாள் இரவு நல்ல மழை பெய்தது. எங்கும் நீர் பெருகி ஓடிற்று. அச்சமயத்தில் சில குரங்குகள் குளிரால் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு ஒரு மரக்கிளையில் உட்கார்ந்திருந்தன. அப்போது தரையில் ஏதோ 'மினுக் மினுக்'கென்று வெளிச்சம் தெரிந்தது. அதனைக் கண்ட குரங்குகள், " அதோ நெருப்பு இருக்கின்றது; சென்று குளிர் காயலாம். சுள்ளிகளைப் பொறுக்கிப் போட்டால், பெரு நெருப்பு உண்டாகும். நாம் இனிக் குளிரால் கஷ்டப்பட வேண்டுவதில்லை " என்று ஒன்றுக்கொன்று பேசிக்கொண்டன.

2. அதனைப் பக்கத்து மரத்துக் கிளையிலிருந்த குருவி ஒன்று கேட்டது. அது, குரங்குகளைப் பார்த்து, "அது நெருப்பு அன்று ; அது மின்மினிப் பூச்சியின் வெளிச்சம்," என்று கூறிற்று. அம்மட்டோடு நில்லாமல் அக்குருவி, "மின்மினிப் பூச்சியின் வெளிச்சம் குளிர்காய உதவாது," என்றும் கூறியது.

3. அதனைக் கேட்ட குரங்குகள், "அது, நெருப்பு தான். நெருப்பு குளிர்காய உதவாதா ?" என்று கூறின. அதற்குக் குருவி, "அது நெருப்பல்ல; அது ஒருவகைப் பூச்சி ; அது இரவில் 'மினுக் மினுக்'கென்று மின்னும்; அப்போது அது நெருப்புப்போல் தோன்றும்," என்று கூறிற்று.

4. அதனைக் கேட்ட குரங்குகள் சினங் கொண்டன. "எங்களுக்கு நெருப்பு இன்னதென்று தெரியாதா? நாங்கள் நெருப்பைப் பார்த்ததில்லையா ? நீ எங்களைப் பரிகாசம் செய்கிறாய். எங்களுக்குப்புத்தி இல்லை என்று நீ நினைக்கிறாய். நாங்கள் உனக்குப் புத்தி புகட்டுகிறோம்," என்று கூறிக் குரங்குகள் அந்த மரத்திற்குத் தாவிச் சென்று, குருவியின் கூட்டை நாசம் செய்தன.

"அற்பருக்குப் புத்தி சொன்னால் ஆபத்தாக முடியும்," என்பதை அறிந்த குருவி அவ்விடத்தை விட்டுப் பறந்தோடியது.

### வினாக்கள்

1. குரங்குகள் எங்கே தங்கி இருந்தன ?
2. அவை எந்த நிலையில் இருந்தன ?
3. குரங்குகள் என்ன பேசிக் கொண்டன ?
4. குரங்குகள் பேசியதைக் கேட்ட குருவி என்ன சொல்லிற்று ?
5. குரங்குகள் குருவிக்குச் செய்த தீங்கு யாது ?
6. இதனால் நாம் அறிவது என்ன ?

# 6. இளைஞர் சங்கம்

1. மாணவர்களே, நம்நாடு சுதந்தரம் அடைந்து ஏழு ஆண்டுகளாயின. சுதந்தர இந்தியாவை முன்னேற்றம் அடையும்படி செய்வது நம் கடமை. அதற்காக நம் நாட்டில் இளைஞர்கள் ஒவ்வோர் ஊரிலும் சங்கங்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். அச் சங்கங்கள் அரசியல், மதம், நாடகம், இசை முதலிய கலைகள், மொழி, தொழில், சுகாதாரம் முதலியவை சம்பந்தமாக ஏற்படுத்தப்படுகின்றன. கிராம மக்கள் அவற்றில் தமக்கு விருப்பமான சங்கங்களில் சேர்ந்துகொள்ளுகிறார்கள்.

2. இவ்வாறே ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு மாணவர் சங்கம் இருக்கிறது. மாணவ, மாணவியருடைய கல்வி வளர்ச்சி, உடல் வளர்ச்சி, ஒழுக்க நெறி வளர்ச்சி என்பன குறித்துத் தொண்டு செய்வதே பள்ளி மாணவர் சங்கத்தின் கடமையாகும். சங்கம் என்பது பலர் கூடும் இடம். அங்கு ஒரு பொருளைப்பற்றிப் பலரும் தத்தம் கருத்துக்களைக் கூறுவர். அக்கருத்துக்களை மனத்திற்கொண்டு, மாணவ மாணவிகள் முன்னேறுவதற்குச் சங்கம் துணை செய்கிறது.

3. ஒவ்வொருவரும் தமது நலத்தைக் கருதாமல், பிறர் நலங்கருதி உழைக்கவேண்டும். "நாம் பணி செய்யப் பிறந்தோம். பிறருக்கு நன்மை செய்வதே நமது கடமை. பிறருக்கு நாம் நன்மை செய்வதால், நமக்குப் பல நன்மைகள் தாமே வந்து சேரும்,' என்பதை மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் உணர வேண்டும். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்றார் தமிழ்ப் பெரியார் ஒருவர்.


முதியோர் பாடசாலை

4. நாட்டு நலங்கருதி, உழைக்கும் சங்கங்களே யாவருக்கும் நன்மை செய்வனவாம். பொது மக்களுக்குச் செய்யும் தொண்டே மிகச் சிறந்தது. அது சமூகத்தொண்டு எனப்படும். சமூகத்தொண்டு செய்யும் சங்கங்களில் சேர்ந்து உழைப்பதால் நாம் நமக்கும், சமூகத்திற்கும், நாட்டுக்கும் தொண்டு புரிந்தவர் ஆவோம். ஒருவர் தனித்துச் செய்யும் தொண்டினைக் காட்டிலும் பலர் கூடிச் செய்யும் தொண்டு அதிகமாகவும் நன்மை விளைவிப்பதாகவும் இருக்கும் அல்லவா?

5. இந்தியா மிகப் பரந்த தேசம். இத்தேசத்தில் பயிர் செய்வதே முக்கிய தொழிலாக இருக்கிறது. பயிர்த்தொழில் செய்பவர் அனைவரும் கிராமங்களில் வசிக்கின்றனர். அவருள் பெரும்பாலோர் கல்வி யறிவு அதிகம் இல்லாதவராய் இருக்கின்றனர். அவர்களுக்குச் சுகாதார முறையில் வாழ்வதற்குத் தெரிவ தில்லை. கல்வி அறிவு அதிகம் இல்லாதவர்களாய் இருப்பதனால் உலகத்தில் அவ்வப்போது கண்டுபிடிக்கும் புதிய விவசாயக் கருவிகளைத் தொழிலுக்குப் பயன் படுத்த அவர்களால் இயல்வதில்லை. அவர்கள் தங்கள் குழந்தைகளின் கல்வியிலும் அக்கறை காட்டுவதில்லை. தாங்கள் வசிக்கும் கிராமங்களை ஒழுங்காகவும் சுத்தமாகவும் வைத்துக்கொள்வதில்லை. நாகரிக வாழ்க்கையின் நன்மைகளை அவர்கள் அறிவதில்லை. அவர்களைச் செம்மைப்படுத்தி நாகரிக முறையில், சுகாதார நெறி யில், கல்வியறிவு வாய்ந்தவர்களாய் வாழும்படி செய்ய வேண்டுவது இளைஞர் சங்கங்களின் கடமையாகும்.

6. அவ்வாறு செய்வதற்குப் பெரியோர்கள் மட்டுமே கடமைப்பட்டவர்கள் என்று நினைக்க வேண்டா. அத்தொண்டில் இளைஞர்களும் பங்குகொள்ள வேண்டும். இளைஞர் தமக்குத் தொண்டு செய்ய முற்படுவ-

தைக் காணும் முதியோராகிய கிராம மக்கள் அவ்விளை-ஞரின் தொண்டுக்குத் துணைபுரிய முற்படுவார்கள்.

7. இளைஞர் பலர் ஒன்றுகூடிப் பள்ளியில் மட்டு-மின்றி, வெளியிலும் சங்கம் அமைக்கவேண்டும். அவர்-களுள் ஒருவரைத் தலைவராகவும், மற்றொருவரை உப தலைவராகவும் தேர்ந்தெடுக்க வேண்டும். செயலாளர் இருவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும். நிர்வாக அங்கத்-தினர் சிலரையும் தேர்ந்தெடுக்க வேண்டும். பிறகு சங்-கம் கிராமங்களில் செய்யவேண்டிய வேலைகளைப் பல வகையாகப் பிரித்துத் திட்டமிட்டுக்கொள்ள வேண்டும். அங்கத்தினர்கள் அத்திட்டங்களைச் செய்து முடிக்கச் சிறு சிறு குழுக்களாகப் பிரியவேண்டும். அந்த அந்தக் குழுவினர் அவரவர்க்கு உரிய செயல்களைச் செய்து முடிக்க வேண்டும். இதுவே இளைஞர் சங்கங்கள் செய-லாற்ற வேண்டிய முறை.

8. சங்கத்தினர் ஒழுக்கம், ஒழுங்கு, உழைப்பு, ஒற்றுமை, உண்மை பேசுதல். இனிமையாகப் பேசுதல் முதலிய நற்குணங்கள் நிரம்பியவராயிருக்க வேண்டும். அவர்களுள் கருத்து வேறுபாடு இருக்கவே கூடாது. ஒற்றுமை மனப்பான்மை இருந்தாலன்றி எந்தக் காரி-யத்தையும் செய்து முடிக்க இயலாது. இளைஞர் சங்கத்-தார் ஓய்வு நேரத்தில் பள்ளியிற் படிக்காத சிறுவர் சிறுமிகளுக்கு, சுகாதார வழியில் வாழும்படி எடுத்துச் சொல்லி, அதன் பயனை விளங்க வைக்கவேண்டும். கிராமங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுமாறு அவர்களுக்குப் போதிப்பதற்கு முன் அதனைத் தாங்-களே செய்துகாட்ட வேண்டும்.

9. இக்காலத்தில் கிராம மக்களுக்குத் தொண்டு செய்ய அநேக சாதனங்கள் இருக்கின்றன. ரேடியோ, திரைப்படக் காட்சி, நூல்நிலையம் முதலியவற்றை அர-

சாங்கத்தாரிடம் பெற்றுப் பயன்படுத்தினால் கிராமச் சீர்திருத்தத் தொண்டு நல்ல வெற்றியைப் பெறும். இதற்குச் சலியாத உழைப்பும், ஊக்கமுள்ள இளைஞர் சங்கங்களே ஆங்காங்குத் தேவை. கற்ற இளைஞன் ஒவ்வொருவனும் கல்லாத இளைஞன் ஒருவனுக்கோ, அன்றி, முதியவர் ஒருவருக்கோ கல்வி கற்றுக் கொடுப்பானானால், பத்தாண்டுகளில் நம் நாட்டில் எழுதப் படிக்கத் தெரியாதவர்களே எங்கும் இரார். இது நம் நாட்டு அறிஞர்களின் கருத்து. அவ்வாறு செய்வதற்கு ஒவ்வொரு கிராமத்திலும் இளைஞர் சங்கங்கள் அமைத்துத் தொண்டாற்ற வேண்டும். கல்வி கற்ற சிறுவரும், சிறுமியரும் தாங்கள் நாட்டிற்குச் செய்ய வேண்டிய இக்கடமையை உணர வேண்டும்.

*அரும்பதங்கள் :* இளைஞர், சுதந்தரம், அறிஞர், தொண்டு, நலம், உணர்தல், கருதாமல், பெரும்பாலோர், அக்கறை, செம்மை, நாகரிகம், முதியோர், திட்டம், குழுக்கள், சாதனங்கள்.

**பயிற்சி**

1. விடை எழுது :
   - அ. நமது நாட்டில் எது எதற்குச் சங்கங்கள் உள்ளன ?
   - ஆ. பள்ளி மாணவர் சங்கத்தின் கடமைகள் யாவை ?
   - இ. மாணவ மாணவியர்க்குப் பள்ளிச் சங்கம் எவ்வாறு துணை புரிகிறது ?
   - ஈ. சமூகத் தொண்டு என்பது யாது ?
   - உ. நமது நாட்டின் முக்கியத் தொழில் யாது ?
   - ஊ. கிராம மக்களிடம் காணப்படும் குறைகள் யாவை ?
   - எ. அவற்றை எப்படி நீக்கலாம் ?
2. எதிர்ப் பதங்கள் எழுது :

   அறிவாளி ×
   நன்மை ×
   பெரும்பான்மையோர் ×
   இல்லாதவர் ×
   இளைஞர் ×
3. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது :

   இளைஞர்—முதியோர்—குழுக்கள்—திட்டம்—அரசாங்கம்—சீர்திருத்தம்—சிறுமி—கடமை.

# 7. உலோகங்கள்

1. உலகில் வாழும் மக்கள் பல வகையான ஆபரணங்கள் அணிகிருர்கள். அநேக வகையான பாத்திரங்கள் உபயோகிக்கிருர்கள். பல வகையான கருவிகளைப் பயன்படுத்துகிருர்கள். அவையெல்லாம் எவற்ருல் செய்யப்படுகின்றன ? அணிகள் தங்கத்தாலும் வெள்ளியாலும் செய்யப்படுகின்றன. கருவிகள் பெரும்பாலும் இரும்பினுல் செய்யப்படுகின்றன. இவற்றுள் தங்கம், வெள்ளி, ஈயம், செம்பு, இரும்பு என்பன ஐந்தும் **பஞ்சலோகங்கள்** எனப்படும். பித்தளேயும், வெண்கலமும் உலோகங்களின் கலப்பால் உண்டாக்கப்படுகின்றன.

2. உலோகங்கள் யாவும் பூமியிலிருந்தே வெட்டி எடுக்கப்படுகின்றன. அவை பூமியில் மிக்க ஆழத்தில் மண்ணேடும் கல்லோடும் கலந்திருக்கும். பூமியைக் குடைந்து அவற்றை வெட்டி எடுக்க வேண்டும். உலோகங்களே எடுப்பதற்காகக் குடையப்படும் நில வறை, **சுரங்கம்** என்றும், **கனி** என்றும் கூறப்படும்.

3. பஞ்ச உலோகங்களில் விலேயுயர்ந்தது பொன். இதற்குத் தங்கம், கனகம் முதலிய வேறு பெயர்களும் உண்டு. இது மஞ்சள் நிறம் உடையது; ஒளி நிறைந்தது; மற்ற உலோகங்களேக் காட்டிலும் மிருதுவானது. உலகில் பல இடங்களில் பொன் வெட்டி எடுக்கப்படுகிறது. ஆனுல் தென் ஆப்பிரிக்காவில் இது அதிகமாகக் கிடைக்கிறது. நம் நாட்டில் மைசூரைச் சேர்ந்த கோலார் என்னும் இடத்தில் பொன் கிடைக்கிறது.

4. பொன்னே வெட்டியெடுத்து நகைகள் முதலியன செய்வதற்கு இயலாது. அதனேடு சிறிதளவு

செம்பு கலந்தால்தான் அது உறுதி அடைகிறது. அப்போதுதான் அதனுல் அணிகள் முதலியன செய்ய முடியும். தங்கத்தினின்று தங்க ரேக்குகளும்,தங்கச் சரிகைகளும் செய்கிருர்கள். தங்கச் சரிகைகளை அமைத்து ஆடைகள் செய்கிருர்கள். முற்காலத்தில் நமது நாட்டில் ஆண்ட அரசர்கள் தங்க நாணயங்களை வழங்கி வந்தார்கள். நம் நாட்டில் நாம் பொன்னைப் பவுன் அல்லது சவரன் என்னும் உருவில்தான் பெறுகிறோம். தங்கம் மருந்து செய்யவும் பயன்படுகிறது.

5. பொன்னுக்கு அடுத்தபடி விலையுயர்ந்ததாய் இருப்பது வெள்ளி. வெள்ளி என்ற பெயர் அந்த உலோகத்திற்கு அதன் நிறத்தால் வந்தது. வெள்ளி அதிகமாகப் பயன்படக்கூடிய உலோகம். வெள்ளி வெட்டி எடுக்கப்படும் நாடுகளுள் முதன்மையானது வட அமெரிக்காவின் தென்பாகத்தில் உள்ள மெக்ஸிகோ நாடாகும். அடுத்தபடி அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், அதற்கு அடுத்தபடி கனடாவிலும் கிடைக்கின்றது. வெள்ளியும் மண்ணுடன் கலந்தே கிடைக்கும். அதனை வெட்டி எடுத்துச் சுத்தம் செய்வர். வெள்ளியினுல் காலில் அணியப்படும் காப்பு, கொலுசு முதலிய நகைகள் செய்வர். பாத்திரங்கள் செய்வர். நமது நாட்டு மக்கள் வெள்ளியை மிகவும் அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். எவ்வளவு ஏழையானுலும் அவனிடத்தும் சிறிதளவு வெள்ளி இருக்கும். எல்லா நாடுகளிலும் நாணயங்களை வெள்ளியினுல் செய்கின்றனர். வெள்ளியினுல் சரிகை செய்து ஆடைகளில் அமைத்து நெய்வார்கள்.

6. செம்பு என்னும் உலோகமும் பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படுவதே. இது சிவப்பு கலந்த பழுப்பு நிறம் உடையது. இதனை உருக்கிக் காய்ச்சித் தகடுகள்

அடிப்பார்கள். அவற்றைக் கொண்டு பாத்திரங்கள் செய்வார்கள். முற்காலத்தில் செப்புத் தகடுகளில் சாசனங்கள் எழுதினூர்கள்; அம்மாதிரியான செப்பேடு-களை இன்றும் பொருட்காட்சிச் சாலைகளில் காணலாம். செம்பில் துரு பிடிக்கும். அதனைக் களிம்பு என்று கூறுவர். செம்பும் நாணயங்கள் செய்வதற்குப் பயன் படுகிறது. செம்புக்குத் தாமிரம் என்னும் வேறு பெய-ரும் உண்டு.

7. ஈயம் என்பது மங்கலான வெண்ணிறம் உள்-ளது. இதுவும் பூமியிலிருந்தே எடுக்கப்படுகிறது. இதற்கு வங்கம் என்ற பெயரும் உண்டு.ஈயமும் பல வகைகளில் பயன்படுகிறது. ஈயத்தினூல் பலவகையான பாத்திரங்-கள் செய்கிறூர்கள். ஈயம் வெள்ளீயம், காரீயம் என்று இருவகைப்படும். ஈயத்தைக் காகிதம் போன்ற தகடுகளாகச் செய்யலாம். ஈயத்திற்குப் பளப்பளப்பு உண்டு. இதுவும் மருந்துக்கு உபயோகப்படுகிறது.

8. இரும்பு மிகக் கடினமான உலோகம். இது-வும் பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படுகிறது. நம் நாட்டில் மைசூர், ஹைதராபாத், ஒரிஸ்ஸா, பீஹார் முதலிய இராச்சியங்களில் இரும்புச் சுரங்கங்கள் இருக்-கின்றன. இரும்பு இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள், ரஷ்யா, பிரான்சு முதலிய நாடுகளில் அதிக-மாகக் கிடைக்கின்றது. இரும்பைக்கொண்டுதான் நாம் பலவகைக் கருவிகளைச் செய்கிறோம். பெரிய இயந்திரங் கள் எல்லாம் இரும்பினூல் செய்யப்படுகின்றன. குண்-டூசி முதல் இரயில் எஞ்சின் வரை இரும்பினூல் உண்டா-வனவே. இரும்போடு நிலக்கரியைக் கலந்து காய்ச்சி னூல் எஃகு உண்டாகிறது. எஃகினூல் கூர்மையான கத்தி முதலிய ஆயுதங்களைச் செய்யலாம். இரும்பு, பலவகை மருந்துகள் செய்ய உபயோகப்படுகிறது. 'இளைத்த

தவன் இரும்பைத் தின்க,' என்பது பழமொழியாகும். மக்கள் வாழ்க்கையில் இரும்பைப் போலப் பயன்படும் உலோகம் வேறு எதுவும் இல்லை.

*அரும்பதங்கள் : ஆபரணங்கள், வெண்கலம், ஈயம், பித்தளை, பஞ்சலோகம், குடைந்து, நிலவறை, சுரங்கம், கனி, ஒளி, நாணயங்கள், தகடுகள்.*

**பயிற்சி**

1. *விடை எழுது :*

அ. உலோகங்கள் எங்குக் கிடைக்கும்?
ஆ. பஞ்சலோகம் என்பவை எவை?
இ. நமது நாட்டில் பொன் எங்குக் கிடைக்கிறது?
ஈ. வெள்ளி கிடைக்கும் நாடுகள் எவை?
உ. செம்பின் நிறம் யாது? அது எங்கெங்குக் கிடைக்கிறது?
ஊ. இரும்பின் பயன்கள் யாவை?

2. கோடுள்ள இடங்களைத் தக்க சொற்களால் நிரப்புக :

அ. மக்கள் பலவகையான———அணிகிறார்கள்.
(சாமான்கள், குடைகள், நகைகள்)

ஆ. உலோகங்கள்———இருந்து வெட்டி எடுக்கப்படுகின்றன. (வானில், நீரில், பூமியில்)

இ. பொன்னோடு சிறிதளவு———கலக்கவேண்டும்.
(தண்ணீர், செம்பு, நிலக்கரி)

ஈ. ஈயம் என்பது———நிறம் உடையது.
(மஞ்சள், பச்சை, வெண்மை)

3. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது :

ஆபரணங்கள்—பெரும்பாலும்—இயலாது—சரிகை—பயன்படும்—மங்கலான—அம்மாதிரி.



# 8. தென்னையும் பனையும்

1. நம் நாட்டில் தென்னை மரங்களையும், பனைமரங்களையும் பாராதவர்களே இருக்க மாட்டார்கள். தமிழ்நாட்டுக் கிராமங்களில் தென்னை மரங்களைக் காணலாம். தென்னை, பனை, கமுகு, ஈந்து என்பன ஓரினமாகும். தென்னை மரம் மணற்பாங்கான இடங்களில் நன்கு வளரும். ஆற்றங்கரைகளிலும் கடலை யடுத்த மணற்பாங்கான இடங்களிலும் தென்னை ஏராளமாகப் பயிராகும். தென்னையைத் **தெங்கு** என்றும் கூறுவர்.

2. தென்னை மரத்திற்குக் கிளை இல்லை. தென்னை மரத்தின் உச்சியில் மட்டைகள் உள்ளன. தென்னை மரம் முப்பது முதல் நாற்பதடி உயரம் வளரும். அதன் இலையை **ஓலை** என்பர். ஓலைகளை உடையது **மட்டை** எனப்படும். ஓலைகள் தனித்தனியாய் இருப்பதால் காற்றினுல் மட்டை முறிந்து விழாது.

3. தென்னையின் முற்றின காய்க்கு **நெற்று** என்பது பெயர். நெற்றுக்களைப் பூமியில் புதைத்து நாற்ருக வளரச் செய்து நடுவது வழக்கம். அதனை மூன்று அல்லது நான்கு அடி ஆழம் குழி தோண்டி நடுவார்கள். தென்னையின் சிறு செடியைத் **தென்னம்பிள்ளை**

என்பார்கள். தென்னை ஐந்து அல்லது ஆறு வருடங்கள் கழித்தே பயன் தரும். தென்னையைத் தோப்பாக வைத்து வளர்ப்பார்கள்.

4. வளர்ந்த தென்னை மரத்தில் பாளை தோன்றும். அதிலிருந்து பூவும், குரும்பைகளும் வெளிப்படும். குரும்பைகளில் பல உதிர்ந்து விடும். சில மட்டும் முற்றிக் காயாகும். தென்னை, குலைகுலையாய்க் காய்க்கும். ஒரு தென்னை மரம், ஓர் ஆண்டில் நூற்றுக் கணக்கில் காய்கள் காய்க்கும். ஒரு குலையில் பத்து அல்லது பன்னிரண்டு காய்கள் இருக்கும். சில ஜாதி மரங்களில் ஐம்பது அறுபது காய்களும் இருக்கும். முற்றாத தேங்காய்க்கு **இளநீர்** என்பது பெயர். இது கோடையில் குடிப்பதற்கு இன்பமாக இருக்கும். இளங்காயின் உள்ளிருப்பது **வழுக்கை** எனப்படும். அது முற்றிப்பருப்பாகும். முற்றின காய்களை வெயிலில் உலர்த்தினால் **கொப்பரை** ஆகும். தேங்காய், சமையலுக்கும், தின்பண்டங்கள் செய்வதற்கும் பயன்படும். கொப்பரையைச் செக்கிலிட்டு ஆட்டி, நெய் எடுப்பார்கள். தேங்காய் நெய்யைத் தேங்காய் எண்ணெய் என்று சொல்வது வழக்கமாகி விட்டது. இது தவறு. தேங்காய் நெய் என்று கூறுவதே சரி. தேங்காய் நெய் சமையல் செய்வதற்கும் பயன் படும். தேங்காய் நெய் புண்களை ஆற்றும்.

5. தென்னையோலை, கீற்று முடையவும், குடலைகள் பின்னவும் பயன்படுகிறது. ஓலையின் நடுவிலுள்ள ஈர்க்கு துடைப்பமாகப் பயன்படுகிறது. மரம் வீடு கட்ட உதவுகிறது. தென்னங் கீற்றுக்களை வீட்டுக்குக் கூரைவேயவும், வேலியடைக்கவும் உபயோகிப்பர். தேங்காய் ஓட்டுக்குக் **கொட்டாங்கைச்சி** என்பது பெயர். அதனால் அகப்பை, பொத்தான் முதலியன செய்வார்கள். தேங்காய் மட்டையிலுள்ள நார் உறுதி-

யுள்ளது. ஆகையால் அதனைக் கொண்டு கயிறு திரிப்பார்கள். தாம்புக் கயிறு, தேர் வடம், படகு கட்டும் கயிறு, மிதிபாய் முதலியன தேங்காய் நாரினால் செய்யப்படுகின்றன. தென்னம்பாளையிலிருந்து பதநீர் இறக்குவர். பதநீரைக் காய்ச்சிக் கருப்புக் கட்டி செய்யப்படுகிறது. தென்னை மரத்தின் ஓலை, மட்டை, பாளை முதலியன யாவும் அடுப்பெரிக்க உதவுகின்றன. தென்னை மரத்தின் ஒவ்வொரு பாகமும் நமக்குப் பயன் படுகிறது.

6. தென்னையைப் போலப் பனையும் உயரமாக வளரும். பனைமரத்தின் உச்சியில் மட்டைகள் அடர்த்தியாய் இருக்கும். பனை மரத்தின் எல்லாப் பாகங்களும் பயன் உடையனவே. அடி மரம் வீடு கட்டப் பயன்படுகிறது. ஓலை கூரை வேயவும், வேலி கட்டவும் பயன்படுகிறது. மட்டையிலிருந்து நார் உரித்துக் கயிறு திரிப்பார்கள். பனையோலையால் இறைகூடை செய்வார்கள். அது தண்ணீர் இறைக்கப் பயன்படும். சிறு பனையை வடலி என்பர். சிறு பனை ஓலையால் விசிறி செய்வார்கள். பனம் பழத்தைச் சுட்டும் அவித்தும் தின்பார்கள். இளங்காய்க்கு நுங்கு என்பது பெயர். பனங்காயினுள் ஒன்று முதல் மூன்று கொட்டைகள் இருக்கும். பனங்கொட்டைகள் மண்ணில் புதையுண்டால், அதிலிருந்து கிழங்கு முளைத்துச் செடியாகும். பனங் கிழங்கைச் சுட்டும், வேக வைத்தும் தின்பர். பனங்குலையையும் கலியாணப் பந்தல்களில் கட்டுவார்கள். பனை மரத்தின் எல்லாப் பாகங்களும் அடுப்பெரிக்க உதவும். பனை, கருமை நிறம் வாய்ந்தது. முற்காலத்தில் நம் நாட்டில் பனையோலைகளில் நூல்கள் எல்லாம் எழுதி வந்தார்கள். இன்னும் நூல் நிலையங்களில் பனையேடுகளில் எழுதிய நூல்களைப் பத்திரம் செய்து வைத்திருக்-

கிறார்கள். பனைமரத்தின் பாளையிலிருந்து சாறு இறக்கு-வார்கள். அதற்குப் பதநீர் என்பது பெயர். அதைக் காய்ச்சி வெல்லமும் கற்கண்டும் செய்வது நமது நாட்டுத் தொழில்களுள் ஒன்று.

*அரும்பதங்கள் : கமுகு, ஈந்து, தெங்கு, மணற்பாங்கு, நெற்று, குரும்பைகள், வழுக்கை, குடலை, ஈர்க்கு, கொட்டாங் கைச்சி, வேய்தல், ஏடு, பதநீர்.*

## பயிற்சி

1. *விடை எழுது :*

   அ. தென்னை எவ்விடங்களில் நன்றாக வளரும்?
   ஆ. தென்னை எவ்வாறு பயிர் செய்யப்படுகிறது?
   இ. தென்னையின் உபயோகங்கள் எவை?
   ஈ. வடலி என்பது யாது?
   உ. பனைமரத்தின் பயன்கள் யாவை?

2. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது :

   ஈந்து—நெற்று—பாளை—வழுக்கை—கொப்பரை—உச்சி—இறைகூடை—சாறு—நாட்டுத் தொழில்.

3. எது எதற்குப் பொருந்தும்?

| | |
|---|---|
| தென்னையைத் | வெயிலில் உலர்த்தினால் கொப்பரை ஆகும். |
| ஓலைகளை உடையது | கருப்புக்கட்டி செய்கிறார்கள். |
| முற்றின காய்களை | இறை கூடை செய்யலாம். |
| பதநீரைக் காய்ச்சி | கிழங்கு முளைக்கும். |
| பனை ஓலையால் | கலியாணப் பந்தலில் கட்டுவார்கள். |
| பனங்கொட்டையிலிருந்து | தெங்கு என்றும் கூறுவர். |
| தேங்காய்க் குலைகளை | மட்டை எனப்படும். |





# 9. பனைமரம்

## பாட்டு

பனைமரமே, பனைமரமே,
ஏன்வளர்ந்தாய் பனைமரமே?

நான்வளர்ந்த காரியத்தை
நாடறியச் சொல்லுகிறேன்:

வெட்டநல்ல விறகாவேன்,
வீடுகட்ட மரமாவேன்.

பட்டுப்போகும் பயிர்களுக்குப்
பலத்தநல்ல ஏற்றமாவேன்.

கட்டநல்ல கயிறுவேன்,
கன்றுகட்டத் தும்பாவேன்.

மட்டமுள்ள உறியாவேன்,
மாடுகட்டத் தும்பாவேன்.

எழுதுகின்ற பிள்ளைகட்கு
எழுத்தாணிக் கூடாவேன்.

வாசிக்கும் பிள்ளைகட்கு
வண்ணத் தடுக்காவேன்.
பாலர்பெரி யோர்களுக்குப்
பனம்பதநீர் நானுவேன்.
சித்திரைக் கோடையிலே
சிறந்தநல்ல நுங்காவேன்.
காளையர்க்கும் கன்னியர்க்கும்,
களைதீர்க்கும் விசிறியாவேன்.
தர்க்கங்கள் என்னாலே,
சாத்திரங்கள் என்னாலே.
இராமாயணம் என்னாலே,
பாரதமும் என்னாலே.
வர்த்தகரும் செட்டிகளும்,
வழியறிவ தென்னாலே.
பலசரக்கு மண்டிகளில்
பத்திரமாய் நானிருப்பேன்.
இத்தனைக்கும் உதவிஎன்று
எனைஇறைவன் படைத்திட்டான்.

— ஒரு பழம் பாட்டு.

# 10. தெனாலி ராமர் செய்த வேடிக்கை

1. விஜயநகர சாம்ராஜ்யத்தைக் கிருஷ்ணதேவ ராயர் என்பவர் ஆண்டு வந்தார். அவர் வீரத்திலும், கல்வி அறிவு ஒழுக்கங்களிலும் சிறந்தவர்; சம்ஸ்கிருதமும், தெலுங்கும் நன்கு கற்றவர். கிருஷ்ணதேவ ராயர் புலவர்களை ஆதரித்து வந்தார். அவர் சபையில் தெனாலி ராமர் என்ற விகடகவி ஒருவர் இருந்தார்.

2. தெனாலி ராமர் நுண்ணறிவு படைத்தவர். கல்வி கேள்விகளிலும் மிகச் சிறந்தவர். அவ்வப்போது வேடிக்கையாகவும் விநோதமாகவும் பேசி இராயரை மகிழ்விப்பார். அவர் சொல்லும் செயலும் கிருஷ்ண தேவ ராயருக்கு விடாச் சிரிப்பினை விளைவிக்கும். ''இன்பச் சிரிப்பு உடலுக்கு நலம்தரும்,'' என்பர் இராயர்.

3. சில சமயங்களில் தெனாலி ராமர் இராயருக்குக் கோபம் வரும்படி குறும்புத்தனமாக நடந்து கொள்வதும் உண்டு. அப்பொழுது இராயர் கடிந்து கொள்வார். உடனே தெனாலி ராமர் ஏதாவது விநோத மான செயலாலோ, சொல்லாலோ இராயரை மகிழ்விப்பார்; சினம் பறந்து போய்விடும். ''நீர்கிழிய எய்த வடுபோல மாறுமே, சீரொழுகு சான்றோர் சினம்,'' என்பது நாம் அறிந்தது அல்லவா?

4. ஒருசமயம் தெனாலி ராமர், இராயருக்கு மிக்க கோபம் உண்டாகும்படி நடந்துகொண்டார். இராயர் சினத்தோடு, ''இனி, நீர் என்முன் தலையைக் காட்டாதீர்; காட்டினால் உம் தலையை வெட்டிவிடுவோம்!'' என்று மிகவும் கடுமையாக உத்தரவிட்டார். தெனாலி ராமர் அதற்கு அஞ்சுபவரா? இராயர் மனத்தை மகிழ்வித்துப்

பழைய நட்போடு பழகுவதற்கு அவர் ஒரு தந்திரம் செய்தார். தெனாலி ராமர் சலவைத் தொழிலாளி ஒருவரிடம் சென்று, சால் ஒன்றை வாங்கிக்கொண்டு வந்தார். அந்தச் சாலில் கண்கள் மட்டும் தெரியும்படி இரண்டு துவாரங்கள் செய்தார். அதனைத் தலையில் கவிழ்த்துக்கொண்டு அரண்மனையை நோக்கி நடந்தார். இடைவழியில் யார் எது கேட்டாலும் பேசவில்லை.

5. இராயர் கொலு மண்டபத்திற்கு வரும் சமயம் பார்த்து அரண்மனைக்குள் சென்று, இராயர் காணும்படியாக அங்குமிங்கும் திரிந்தார். அங்கு இருந்தவர் யாவரும் சால் தலையைப் பார்த்துச் சிரித்தனர். அவர்கள் அவரைப் பல கேள்விகள் கேட்டும், பதில் ஒன்றும் கிடைக்கவில்லை. இராயர் கொலுமண்டபத்திற்கு வந்தார். அங்குத் திரிந்து கொண்டிருந்த சால்தலையரைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, அவரை அழைத்து வரும்படி உத்தரவிட்டார். அவரைப் பார்த்து, "நீ யார்? ஏன் இந்தக் கோலத்தோடு இங்கு வந்தாய்?" என்று இராயர் சினத்துடன் கேட்டார். தெனாலி ராமர் சிறிதும் அஞ்சாது, "அரசரே, நேற்று உங்கள் முன் தலையைக் காட்டக் கூடாது என்று கட்டளை இட்டீர்கள். ஆதலால் தான், உங்கள் ஆணைப்படி தலையைக் காட்டாமல் இருக்கிறேன்." என்று பதில் கூறினார்.

6. அதைக் கேட்ட இராயருக்குச் சிரிப்பு வந்து விட்டது. அவரிடம் கொண்டிருந்த சினம் விலகியது. இராயர் அவரை மன்னித்து, எப்பொழுதும் போல வரும்படி கட்டளையிட்டார்; சிறந்த பரிசுகளும் தந்தார். அது முதல் தெனாலி ராமர் இராயர் சபைக்கு வழக்கம் போலச் சென்று இராயரை மகிழ்வித்து வந்தார்.

**அரும்பதங்கள் : சாம்ராஜ்யம், ஒழுக்கம், ஆதரித்து, விகடகவி, நுண்ணறிவு, கல்வி கேள்வி, விளைவிக்கும், குறும்புத்தனம், சினம், வடு, சீர், சான்றோர், கடிந்துகொள், கடுமையாக.**

**பயிற்சி**

1. விடை எழுது :

அ. கிருஷ்ணதேவ ராயர் என்பவர் யார்?

ஆ. தெனாலி ராமர் என்பவர் யார்?

இ. தெனாலி ராமரின் கடமை யாது?

ஈ. கிருஷ்ணதேவர் தெனாலி ராமருக்கு இட்ட கட்டளை யாது?

உ. தெனாலிராமர் ராயரின் கட்டளையை எவ்வாறு மீறினார்?

2. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது :

ஒழுக்கம், ஆதரித்து, மகிழ்வி, குறும்புத்தனம், அச்சம், ஆச்சரியம், வழக்கம் போல, பரிசுகள்.

3. எதிர்ப் பதங்கள் எழுது :

சிறந்தவர் ×
அஞ்சாமை ×
நலம் ×
கிடைக்கவில்லை ×
காட்டு ×



# 11. நூல் நிலையம்

1. நூல் நிலையம் என்பது நூல்கள் பல வைத்திருக்கும் இடம். நூல் நிலையத்தில் சரித்திரம், பூகோளம், இலக்கணம், இலக்கியம், கதைகள், சிற்பம், ஓவியம், இசை, சமயம் முதலியவை பற்றிய நூல்கள் இருக்கும். அங்கு வெவ்வேறு மொழிகளில் உள்ள நூல்களையும் திரட்டி வைத்திருப்பார்கள். அவற்றை வகைப்படுத்தி, எண் அமைத்து, வரிசை வரிசையாக அலமாரிகளில் வைத்திருப்பார்கள். எவரும் நூல் நிலையத்திற்குச் சென்று நூல்களை எடுத்துப் படித்துத் தம் அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம்.

2. நூல் நிலையத்துக்குச் செல்பவர்கள் தங்களுக்கு விருப்பமான புத்தகத்தை எடுத்துப் படிக்கலாம். அமைதியாக இருந்து படிப்பதற்கு அங்கு ஏற்ற வசதிகள் உண்டு. அதனால் அங்குச் செல்பவர் தமக்கு வேண்டும் புத்தகத்தை எடுத்துக்கொண்டு ஒரு பீடத்-

தில் அமர்ந்து படிக்கலாம். படித்தவற்றின் குறிப்புக்களை எழுதிக் கொள்ளலாம். ஒரு பொருளைப்பற்றிப் பலர் எழுதியுள்ளதைப் படித்துக் குறிப்புக்கள் எழுதிக் கொள்ள நூல் நிலையந்தான் ஏற்ற இடம். நூல் நிலையத்திற்குச் செல்பவர் சத்தம் செய்யக்கூடாது. சத்தம் செய்தால் பிறர் அமைதியாகப் படிக்கமுடியாதல்லவா ?

3. மக்கள் முன்னேற்றம் அடைவது கல்வியால்தான். கல்வியைப் பள்ளிக்கூடத்தில் கற்றல் மட்டும் போதாது. அங்கு ஒரு குறிப்பிட்ட அளவே பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. அந்த அளவுக்கு மேல் படித்து, அறிவை வளர்த்துக்கொள்ள நூல் நிலையம் இன்றியமையாதது. ஒவ்வொருவனும் நூல் நிலையத்திற்குச் சென்று தன்னுடைய அறிவை விருத்தி செய்து கொள்ளவேண்டும்.

4. ஒவ்வொரு கலையைப்பற்றியும் பல வேறு வகையான நூல்கள் உள்ளன. அவை யாவற்றையும் படித்தறிய விரும்பும் ஒருவன், அந்நூற்கள் அனைத்தையும் தான் ஒருவனே வாங்குவது முடியாது. எவ்வளவு செல்வம் இருந்தாலும் எல்லாவற்றையும் வாங்குவதும், வைத்துக்கொள்வதும் எளிதான காரியம் அன்று. ஆதலால் அரசாங்கத்தாலோ, பொதுமக்களாலோ நடத்தப் படும் பொது நூல்நிலையங்களில் அவை வாங்கி வைக்கப் பட்டிருக்கும். அங்குச் செல்வதால் அந்த நூல்கள் அனைத்தையும் படிக்க வாய்ப்புக் கிடைக்கும்.

5. பல வகையான நூல்களைக் கொண்ட நூல் நிலையம் ஒன்றினுள் நுழையும்போது நம் மனத்துள் பற்பல எண்ணங்கள் தோன்றும். நூல் நிலையத்திற்குள் சென்றதும் நூல்களின் காட்சி நமது மனத்தைக்கவரும். பல அரிய விஷயங்களை அறியவேண்டும் என்ற ஆவல்

பிறக்கும். இத்தனை நூல்களையும் பயின்றால் அறிவு எவ்வளவு வளர்ச்சியடையும் என்ற எண்ணந்தோன்றும். நாம் படித்தது எவ்வளவு குறைவு; படிக்க வேண்டுவது இன்னும் எவ்வளவு இருக்கின்றது என்ற உணர்ச்சியும் தோன்றும். இறந்தவர்களும், முன்னோர்களுமான பேராசிரியர்களோடு நாம் நேரில் பழகுவது போன்ற உணர்ச்சியும் உண்டாகும். வீண் பொழுது போக்கும் வழக்கம் குறைந்து, கல்வியில் ஊக்கம் உண்டாகும். நாம் நூல்களை எடுத்துப் படிக்கும் பழக்கம் ஏற்பட்டால் தீய நண்பர்களோடு சேர்வது நீங்கிவிடும். நாம் காலத்தை வீணாக்க விரும்பமாட்டோம். நமது அறிவு பெருகும். அதனால் நாம் முன்னேற்றம் அடைவோம்.

6. ஒரு நாடும் அதன் மக்களும் முன்னேற்றம் அடைய நூல் நிலையங்கள் மிகவும் அவசியம். ஒவ்வோர் ஊரிலும், சிறியதாயினும், பெரியதாயினும் ஒரு நூல் நிலையம் இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தத்தம் வீட்டில் சில அரிய நூல்களையேனும் சேமித்து வைத்துக்கொள்ள வேண்டும். நூல்களைச் சேகரித்து வைத்துப் படிக்கும் வழக்கத்தை வளர்க்க வேண்டும். வாழ்நாளை வீணாளாக்கிக் கழிக்கக் கூடாது. ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் நூல் நிலையம் இருக்கிறது. ஓய்வு நேரத்தில் அங்குச் சென்று படித்தல் வேண்டும். அப்பழக்கத்தை இளம்பருவத்திலேயே மேற்கொள்ள வேண்டும். மேல் நாடுகளில் இரயிலில் பிரயாணம் செய்யும் போது கூடப் புத்தகங்களைப் பிரயாணிகளுக்குக் கொடுத்துதவும் நூல் நிலையங்கள் உள்ளன. அவற்றால் மக்கள் தம் காலத்தை வீணாக்காமல் நன்முறையில் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். நம்நாடும், நாமும், மொழியும், கலைகளும் ஓங்கி வளர வேண்டு-

மானுல், ஒவ்வொரு சிறு கிராமத்திலும் நூல் நிலையங்களை ஏற்படுத்த வேண்டும். மக்களுக்குப் படிப்பில் ஆசையை உண்டாக்கி, நூல் நிலையங்களுக்குச்சென்று படிக்கும் உணர்ச்சியை உண்டாக்க வேண்டும்.

அரும்பதங்கள்: நூல் நிலையம், சரித்திரம், சிற்பம், ஒவியம், சமயம், மொழிகள், பீடம், குறிப்புக்கள், முன்னேற்றம்.

## பயிற்சி

1. விடை எழுது:

அ. நூல் நிலையம் என்பது யாது?

ஆ. நூல் நிலையத்தில் எவ்வகை நூல்கள் இருக்கும்?

இ. நூல் நிலையத்தில் நூல்கள் எவ்வாறு வைக்கப்பட்டிருக்கும்?

ஈ. நூல் நிலையத்தை நாம் எவ்வகைகளில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்?

உ. நூல் நிலையங்களால் ஏற்படும் நன்மைகள் யாவை?

2. கோடுள்ள இடங்களைத் தக்க சொற்களால் நிரப்புக:

அ. நூல் நிலையத்தில் பல வகையான நூல்கள்——— வைக்கப்பட்டிருக்கும். (சேகரித்து, அடுக்கடுக்காக, பலவகையாக.)

ஆ. மக்கள்——முன்னேற்றம் அடைகிறார்கள். (பேச்சால், கல்வியால், நட்பால்)

இ. எல்லா நூல்களையும் வாங்குவது——காரியம் அல்ல. (சரியான, கஷ்டமான, எளிதான.)

ஈ. ஒவ்வோர் ஊரிலும் ஒரு———இருக்க வேண்டும். (சத்திரம், குளம், நூல் நிலையம்.)



# 12. நவராத்திரி

1. '**நவராத்திரி**' என்பது இந்துக்கள் கொண்டாடும் விழாக்களுள் ஒன்று. 'ஒன்பது இரவுகள்' என்பது இதன் பொருள். இந்தியாவில் இதனை இந்துக்கள் கொண்டாடுகிறார்கள். வட நாட்டில் இவ்விழாவினைப் பத்து நாட்கள் கொண்டாடுகிறார்கள். ஆதலால் அங்கு அதற்குத் 'தசரா' என்னும் பெயர் வழங்குகிறது.

2. இவ்விழா ஒவ்வோர் ஆண்டிலும் புரட்டாசி மாதத்தில் அமாவாசை கழித்த மறுநாள் முதல் பத்து நாட்கள் கொண்டாடப்படும். பத்தாவது நாளுக்கு '**விஜயதசமி**' என்பது பெயர். ஒன்பது நாட்களில் முதல் மூன்று நாட்கள் துர்க்கைக்கு உரியன. அடுத்த மூன்று நாட்கள் இலக்குமிக்கு உரியன. இறுதி மூன்று நாட்கள் கலைமகளுக்கு உரியன என்பர். எனவே வெற்றி, செல்வம், கல்வி இவை மூன்றும் பெருகத் துர்க்கை,

இலக்குமி, சரசுவதி என்னும் தெய்வங்களைத் தொடர்ந்து ஒன்பது நாட்கள் வணங்குவதே இந்த விழாவின் நோக்கமாகும்.

3. நவராத்திரியில் வீட்டில் பொம்மைக் கொலு வைப்பதைக் காணலாம். அக்கொலுவில் பலவகைப் பதுமைகளையும், மற்றும் அரிய காட்சிப் பொருள்களையும் ஒழுங்காக, அழகுபட வைப்பார்கள். துர்க்கை, இலக்குமி, சரசுவதி முதலிய தெய்வங்களின் படங்களோ, உருவச்சிலைகளோ வைக்கப்பட்டு நன்கு அலங்கரிக்கப்படும்.

4. மாலையில் பெண்கள் தம்மை அலங்கரித்துக் கொண்டு, தம் உறவினர் வீடுகட்கும், நண்பர் வீடுகட்கும் சென்று வருவார்கள். அங்கு அவர்கள் இசைப் பாட்டுக்கள் பாடி மகிழ்வார்கள். ஒவ்வொரு வீட்டிலும் கொலு பார்க்க வரும் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் பூ, சந்தனம், வெற்றிலைபாக்கு, வடை, சுண்டல் முதலியன கொடுப்பார்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகையான தின்பண்டம் செய்து வழங்குவது வழக்கம்.

5. விஜயதசமி என்பது வெற்றி பொருந்திய நாள். ஆதலால் அன்று புதிதாகக் குழந்தைகளைப் பள்ளிக் கூடத்தில் வைப்பர். இதனை 'வித்தியாரம்பம்' என்பர். வித்தை என்பதற்குக் கல்வி என்பது பொருள். ஆரம்பம் என்பதற்குத் தொடங்கல் என்பது பொருள். புதிதாகத் தொழிலையோ, காரியத்தையோ தொடங்குபவர்களும் அன்றைய தினத்தில் ஆரம்பிப்பர். அன்று தொடங்கும் காரியம் வெற்றியோடு நன்கு நடைபெறும் என்பது நம்பிக்கை.

6. விஜயதசமிக்கு முன்தினமாகிய ஒன்பதாம் நாள் கலைமகள் விழா. அதனைச் சரசுவதி பூசை என்-

றும், ஆயுத பூசை என்றும் கூறுவர். அன்று படிப்பவர் புத்தகங்களேயும், தொழில் செய்பவர் அத்தொழிலுக்குரிய ஆயுதங்களேயும் வைத்து வணங்குவர்.

7. தமிழ் மன்னர் காலத்தில் நவராத்திரி விழாவின்போது பற்பல நாட்டுப் புலவர் பெருமக்களேயும், இசை வல்லார்களேயும் அம்மன்னர் வர வழைப்பர். அவர்கள் தத்தம் திறமையை அரசவையில் காட்ட வேண்டும். விஜயதசமி அன்று எல்லோர்க்கும் அரசர் தக்கவாறு பரிசளித்துச் சிறப்புச் செய்வார். அந்த முறையை ஒட்டி மைசூர், திருவிதாங்கூர், கொச்சி முதலிய சமஸ்தானங்களில் இக்காலத்திலும் நவராத்திரி விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

*அரும்பதங்கள்; இந்துக்கள், கொண்டாடும், தசரா, ஆண்டு, துர்க்கை, இறுதி, தொடர்ந்து, கொலு, பதுமை, அலங்கரி, வழங்கு, வணங்கு.*

**பயிற்சி**

*1. விடை எழுதுக:*

*அ. நவராத்திரி என்பதற்குப் பொருள் என்ன?*
*ஆ. தசரா என்பதற்குப் பொருள் என்ன?*
*இ. இரண்டிற்கும் வேறுபாடு என்ன?*
*ஈ. தமிழ் நாட்டில் நவராத்திரி பண்டிகை ஏன் கொண்டாடப் படுகிறது?*
*உ. அது எப்படிக் கொண்டாடப்படுகிறது?*

*2. எதிர்ப் பதங்கள் எழுது:*

வட நாடு ×
பல வகை ×
நண்பர் ×
ஆரம்பம் ×
தொடங்கு ×

*3. கீழ் உள்ள சொற்களே வாக்கியங்களில் அமைத்து எழுதுக:*

***கொண்டாடு—ஆண்டு—உரியவை—காட்சிப் பொருள்—உறவினர்-தின்பண்டம்-வழங்கு-ஆரம்பம்-இசை-பரிசு.***



# 13. ஒட்டகம்

1. பூமியில் பல வகை மிருகங்கள் உள்ளன. அவற்றுள் சில, காண்பதற்கு அழகாய் உள்ளன; சில அச்சத்தைத் தருகின்றன; சில விகாரமாய் இருக்கின்றன. மிருகங்களுள் பல, மனிதனுக்குப் பயன்படுவனவாயும் உள்ளன.

2. உலகில் வாழ்வன யாவும் கடவுளால் படைக்கப்பட்டவை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் உலகப் பொது வாழ்விற்குத் தொண்டு செய்கிறது. கூர்ந்து கவனித்தால் இறைவனது படைப்பின் விசித்திரம் புலப்படும்.

3. ஒட்டகம் ஒரு விசித்திரமான மிருகம். அதன் முதுகைப் பார். அது எவ்வளவு கோணலாக இருக்கிறது. விகார வடிவிற்கு உதாரணம் கூறவேண்டுமானால் ஒட்டகத்தையும், காண்டா மிருகத்தையும் கூறலாம். ஒட்டகம் மனிதருக்கு எப்படிப் பயன்படுகிறது என்று பார்ப்போம். ஒட்டகம் மிகவும் உயரமான பிராணி. அதன் கழுத்து மிகவும் நீண்டிருக்கும். அதன் கால்களும் மிக நீளமானவை. ஆனால் அதன் வால் மிகவும் குட்டையானது. ஒட்டகத்தின் முகமும் பார்ப்பதற்கு விகாரமாக நீண்டிருக்கும்.

4. ஒட்டகம் ஒரு சாகபட்சணி. மாமிசம் தின்ஞத பிராணிக்குச் சாகபட்சணி என்பது பெயர். ஒட்டகத்திற்கு வேப்பிலே தின்பதில் பிரியம் அதிகம். தழைகளேயும் முட்புதர்களில் உள்ள இலேகளேயும் அது தின்னும். அதன் பாதம் வட்டமாகப் பரந்து இருக்கும். அதன் முதுகில் உயர்ந்த திமில் இருப்பதைப் படத்தில் பார்க்கலாம்.

5. ஒட்டகத்திற்குப் பாலேவனக் கப்பல் என்பது பெயர். அது பாலேவனங்களேக் கடப்பவர்கட்கு வாகனமாக உதவுகிறது. பாலேவனம் என்பது நீரற்ற வறண்ட பிரதேசம். அது மிகப் பரந்திருக்கும். சிற்சில இடங்களில் மட்டும் சிறிய நீர் ஊற்றுள்ள புல்வெளிகளும், ஈச்ச மரங்களும் நிரம்பி இருக்கும். அவை பாலே வனச் சோலேகள் எனப்படும். அங்குப் பாலேவனத்தைக் கடக்கும் பிரயாணிகள் தங்கி இளேப்பாறிப் பிரயாணத்தைத்தொடங்குவார்கள். அவ்வாருன நீர் கிடைக்காத மணல் வெளிகளில் சில நாட்கள் வரை நீரும் உணவுமின்றிச் சுமைகளோடு செல்லக்கூடிய மிருகம் ஒட்டகம் ஒன்றே. இதற்குக் காரணம் யாது ?

6. ஒட்டகம் உணவும் நீரும் கிடைக்கும் இடத்தில் அவற்றை நிரம்ப உட்கொள்ளும். அவ்வாறு உட்கொண்ட நீர், அதன் திமிலில் சேர்ந்து நிரம்பியிருக்கும். நீர் கிடைக்காத காலத்தில் இந்நீர் அதற்குப் பயன்படுகிறது. அன்றியும், ஒட்டகத்தின் குளம்பு அகன்று பிளவுபட்டிருக்கும். குளம்பின் அடிப்பாகம் கெட்டியான மெத்தை போல இருக்கும். இதஞல் மிகப் பெரிய மிருகமாகிய ஒட்டகம் மணல் வெளியில் நடக்கும்போது, அதன் குளம்புகள் மணலில் அதிக ஆழம் புதைவதில்லே.

7. ஒட்டகத்தை அராபியர் போற்றி வளர்ப்பார்கள். நாம் குதிரையை வளர்ப்பது போல அவர்கள் ஒட்டகத்தை அன்பாய் வளர்ப்பார்கள். அவர்கள் அதன் மாமிசத்தை உண்பார்கள்; பாலைக் குடிப்பார்கள். எகிப்து நாட்டிலும், அரேபியாவிலும் ஒட்டகப் படைகள் உண்டு. மத்திய ஆசியாப் பாலைவனங்களிலும் ஒட்டகம் அதிகம். அங்குக் காணப்படும் ஒட்டகத்துக்கும் அரேபியாவில் காணப்படும் ஒட்டகத்துக்கும் சில வேறுபாடுகள் உண்டு. அராபிய ஒட்டகத்தின் கால்கள் மிக நீண்டிருக்கும். அதன் முதுகில் ஒரே



ஒரு திமில் இருக்கும். ஆசியப் பாலைவனத்து ஒட்டகத்தின் முதுகில் இரண்டு திமில்கள் இருக்கும். அதன் கால்களும் பருத்துக் குட்டையாக இருக்கும். ஒட்டகத்தினிடம் ஒரு மடமைக் குணம் உண்டு. ஒட்டகத்தின்மீது பெரும் பாரங்களை ஏற்றும்போது அது மண்டி இட்டுப் படுத்திருக்கும். சுமை முழுதும் ஏற்றிய பிறகு, ஒரு மணல் மூட்டையையும் அதன்மீது ஏற்றுவார்கள். பின் அதற்குத் தெரியும்படியாக அந்த மணல் மூட்டையைத் 'தொப்'பென்று கீழே தள்ளுவார்கள். ஒட்டகம் தன்மீது ஏற்றிய சுமைகள் எல்லாம் இறக்கப்பட்டு-

விட்டன என்று மனமகிழ்ந்து எழுந்து நடக்குமாம். என்னே அதன் அறியாமை! உண்மையில் ஒரு அராபியர் குடும்பமும், அக்குடும்பத்துச் சாமான்களும் தன் முதுகின்மேல் இருப்பதை அது அறிவதில்லை.

அரும்பதங்கள்: உற்று நோக்கு, அச்சம், விகாரம், படைத்தல், விசித்திரம், புலப்படும், சாகபட்சணி, புதர், இமில், வாகனம்.

## பயிற்சி

1. விடை எழுது:

அ. ஒட்டகம் பார்ப்பதற்கு எப்படி இருக்கும்?

ஆ. ஒட்டகம் எவற்றைத் தின்னும்?

இ. ஒட்டகத்துக்கு வழங்கும் பெயர் யாது? ஏன் அப் பெயர் வழங்குகிறது?

ஈ. அராபிய ஒட்டகத்துக்கும் மத்திய ஆசியப் பாலைவனத்து ஒட்டகத்துக்கும் உள்ள வேறுபாடுகள் எவை?

2. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது.

அச்சம்–விகாரம்–புலப்படும்–புதர் – பிரயாணிகள் – நிரம்பப்பதிகிறது.

3. கோடுள்ள இடங்களைத் தக்க சொற்களால் நிரப்பு:

அ. அவற்றை——நோக்குங்கள்.

(கண்டு, பார்த்து, உற்று.)

ஆ. உலகில் வாழ்வன யாவும்——படைக்கப்பட்டவை.

(மனிதனுல், கடவுளால், மந்திரத்தால்.)

இ. ஒட்டகம் பாலைவனங்களை——உதவுகிறது.

(செல்வதற்கு, போவதற்கு, கடப்பதற்கு.)

ஈ. தண்ணீர் அதன்——சேர்ந்திருக்கும்.

(வாயில், வயிற்றில், இமிலில்.)



# 14. பாலைவனத்து மக்கள்

1. **ஆப்பிரிக்கா** என்பது ஒரு பெரிய கண்டம். அதில் **சகாரா** என்னும் பாலைவனம் இருக்கிறது. அப்பாலைவனத்தில் பழுப்பு நிறமும், வெண்மை நிறமுமுடைய மணலையே எங்கும் காணலாம். பாலைவனம் என்பது சமமாக இராது. அங்கு மேடு பள்ளம், பாறைகள், குன்றுகள் என்பன உண்டு. நடுப்பகலில் உஷ்ணம் அதிகமாக இருக்கும். ஆதலால் காற்றும் நிலமும் வறட்சியானவை. பல வருஷங்கள் சேர்ந்தாற் போல மழையே பெய்யாமலும் இருக்கும். பல மைல் தொலைவு மணலும் பாறையுமே தோன்றும். இவ்விடங்களில் தண்ணீர் கிடைப்பது அருமை.

2. சகாராவில் அடிக்கடி மணற் காற்று வீசும்; காற்று நெருப்புப்போலச் சுடும். சுடுநெருப்புப் போன்ற மணல், கண்ணிலும் காதிலும் புகுந்து வெம்மையை உண்டாக்கும் ; தொண்டை வறண்டுவிடும். இந்த நிலையில் மனிதன் தப்பும் வழி ஒன்றே ஒன்றுதான். அவன் பூமியில் படுத்துக்கொண்டு, ஆடையால் தன் தலையைப் போர்த்துக் கொள்ளவேண்டும்.

3. பாலைவனத்திலும் சில இடங்களில் நீரூற்றுக்கள் இருக்கும். அவற்றைச் சுற்றிலும் தோட்டங்களும், வயல்களும் இருக்கும். தானியங்களும் பயிராகும். பாலைவனத்தில் வளப்பமுள்ள இப்பகுதியைப் **பாலைவனச் சோலைகள்** என்பர். இதனை ஆங்கிலத்தில் '**ஓயஸிஸ்**' என்பர். இப்பாலைவனப் புற்றரைகள் ஆங்காங்கு இல்லாவிட்டால் மனிதர் பாலைவனத்தைக் கடத்தல் இயலாத செயலாகும்.

4. பாலைவனத்தில் வாழும் அராபிய மக்கள் இரு வகை வாழ்க்கை உடையோர். ஒரு வகையினர் பாலைவனப்புல்வெளிகளில் வசிப்பவர். மற்றொரு வகையினர் பாலைவனத்தில் நாடோடி மக்களாய் வசிப்பவர். பாலைவனப் புல்வெளிகளில் ஆடுமாடுகள் வளர்க்கப்படுகின்றன. தினை, சோளம், ஈந்து முதலியவை அங்குப் பயிர் செய்யப்படுகின்றன. அங்கு வசிக்கும் மக்கள் விவசாயிகளும், வியாபாரிகளும் ஆவர். பாலைவனத்தைக் கடக்கும் பிரயாணிகளிடம் பொருள்களை வாங்குவதும் விற்பதும் அவர்கள் தொழில்.

5. பாலைவனப் புல் வெளிகளில் உள்ள வீடுகள் சுடப்படாத செங்கற்களாலேனும், களிமண்ணாலேனும் கட்டப்பட்டிருக்கும். அவ்வீடுகளுக்கு ஜன்னல்கள் இரா. ஆதலால் உட்பக்கம் இருட்டாக இருக்கும். ஈந்தின் ஓலை வேய்ந்த குடிசை வீட்டில் எளிய மக்கள் வசிப்பார்கள். ஈந்து அவர்களுக்குப் பல வகையில் பயன் படும் மரமாகும். தென்னையும் பனையும் போன்று ஈந்தும் உயரமாக வளரும். அதில் ஈச்சம்பழம் குலைகுலையாய்க் காய்த்திருக்கும். அராபியர்களுக்கு மிகப் பிரியமான முக்கிய உணவு ஈச்சம்பழம். அதை அவர்கள் பச்சையாகவும், காய வைத்தும், சமைத்தும் சாப்பிடுவார்கள்.

6. அராபியர்களுக்குப் பல வகைகளில் பயன் படும் மிருகம் ஒட்டகம். ஒட்டகத்திற்குப் பாலைவனக் கப்பல் என்பது பெயர். மணற்காற்று வீசும்பொழுது மூக்கை மூடிக்கொள்ளும் சக்தி அதற்கு உண்டு. கண் இமை பெரிதாக இருப்பதால், அது கண்களையும் மூடிக்-



கொள்ளும்; அவ்விமைகள் சூரிய ஒளியையும் தடுக்கும். ஒட்டகத்தின் மாமிசத்தை அராபியர் உண்பர்; அதன் பாலைக் குடிப்பர். அதன் மயிரைக் கொண்டு கூடாரத்துக்கு வேண்டிய துணியை நெய்து கொள்வர்; கயிறும் திரித்து உபயோகிப்பர்.

7. அராபியர் கூடாரங்களில் வசிப்பர். அக்-கூடாரத்தில் ஒரு பகுதி பெண்களுக்கும், மற்றொரு பகுதி ஆண்களுக்கும் என இரு பகுதிகள் உண்டு. அவர்கள் ஒட்டகத்தின் தோலால் செய்த பைகளில் நீரை நிரப்பி எடுத்துக்கொண்டு செல்வார்கள். பெண்-

களும் குழந்தைகளும் ஒட்டகத்தின்மீது செல்வார்கள். வேலைக்காரர்கள் நடந்து செல்வார்கள்; தலைவன் குதிரைமீது செல்வான். அரபு நாட்டுக் குதிரை தைரியமுடையது; அழகானது; வேகமுள்ளது; கம்பீரமானது. ஓர் அராபியன் எந்தப் பொருளை வேண்டுமாயினும் கொடுத்து விடுவான்; தனது குதிரையை மட்டும் கொடுக்க இசையான். குதிரையைக் கூடாரத்திற்குள் கட்டிக் காப்பான். அராபியர்கள் அடிக்கடி சண்டையிடுவார்கள். வழிபறித்து வாழ்வதும் சில அராபியரின் தொழில்.

*அரும்பதங்கள் : பாலைவனம், வறட்சி, தொலைவு, அருமை, போர்த்துக்கொள், நீரூற்று, பாலைவனச் சோலை, அராபியர், செங்கல், வேய்ந்த, இமை, சேமித்து.*

**பயிற்சி**

1. *விடை எழுதுக:*

*அ. பாலைவனம் எப்படி இருக்கும்?*

*ஆ. உலகில் உள்ள பாலைவனங்களிற் பெரியது எது?*

*இ. பாலைவனச் சோலை என்பது யாது?*

*ஈ. அங்கு மக்கள் எப்படி வாழ்கிறார்கள்?*

*உ. பாலைவனக் கப்பல் என்பது எது? அதற்கு அப்பெயர் வரக் காரணம் என்ன?*

*ஊ. அராபியரைப் பற்றி நீ அறிந்தவை யாவை?*

2. *கீழ் வரும் சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுதுக.*

*பாலைவனம்–வெண்ணிறம்–வறட்சி–வீசு–தொண்டை–நீரூற்று–வாழ்க்கை–நாடோடி.*



## 15. திருக்குற்ருலம்

**கந்தன்:**—நீ சென்ற விடுமுறைக்கு எங்குச் சென்றிருந்தாய்? நான் உன்னுடன் எந்த ஊருக்கேனும் சென்று வரலாம் என்று எண்ணினேன்.

**வேலன்:**—கந்தா, எங்கள் மாமா வந்திருந்தார். அவர் என்னைத் திருக்குற்ருலத்திற்கு அழைத்துச் சென்ருர். அவர் காலையில் வந்தவர், அன்று மாலையே புறப்பட்டுவிட்டதால், நான் உன்னிடம் சொல்லிவிட்-டுப்போக முடியவில்லை.

**கந்தன்:**—அப்படியா! நல்லது. நீ திருக்குற்ருலத்தில் பார்த்தவற்றை எனக்குச் சொல்.

**வேலன்:**—அவ்வாறே சொல்கிறேன் கேள். திருக் குற்ருலம் என்பது ஒரு சிவஸ்தலம். அது திருநெல்-

**வேலி** ஜில்லாவில் இருக்கிறது. அது தமிழ் நாட்டி-லுள்ள சுக வாச ஸ்தலம்.

இத்தலத்தில் குறும்பலா மரத்தடியில் சிவபெருமான் எழுந்தருளியிருக்கிறார். அதனால் இத்தலத்தில் இருக்கும் சிவபெருமானுக்குக் **குறும்பலாநாதர்** என்பது பெயர். தேவியின் பெயர் **குழல்வாய் மொழியம்மை** என்பது. இத்தலத்தில் நடராச பெருமானுக்கு ஒரு சபை உள்ளது. அதனைச் **சித்திர சபை** என்பர். இத்தலம் திருஞான சம்பந்தர் என்னும் பெரியாரால் பாடப் பெற்றது. இத்தலத்தைப் பற்றித் **திரிகூடராசப்பக் கவிராயர்** என்பவர் பல நூல்கள் எழுதியுள்ளார்.

மேற்கு மலைத்தொடரும், கிழக்கு மலைத்தொடரும் **நீலகிரி** என்னும் இடத்தில் சந்திக்கின்றன. நீலகிரிக்குத்தெற்கே, மேற்கு மலைத்தொடர், கடற்கரை ஓரமாய் குமரி முனை வரையிலும் செல்கிறது. நீலகிரிக்குத் தெற்கே உள்ள மேற்கு மலைத்தொடர் **பழனிமலை, யானை மலை, ஏலமலை, அகத்திய மலை** என்று பலபெயர்களுடன் விளங்குகிறது.

திருக்குற்றாலம் அகத்திய மலையின் அடிவாரத்தில் அமைந்து உள்ளது. இங்கு இதற்குக் குற்றால மலை என்பது பெயர். இம்மலை மூன்று சிகரங்களையுடையது. ஆதலால் குற்றால மலைக்குத் திரிகூடமலை என்னும் பெயரும் வழங்குகிறது. திரிகூட மலையில் **சித்திரா நதி** என்னும் ஒரு யாறு உற்பத்தியாகி ஓடிவருகிறது. அது அம்மலையில் பதினாறு மைல் ஓடிவந்து, **தேனருவி, சண்பகாடவி அருவி, பொங்குமாக் கடல், சிற்றருவி,** வடவருவி என்று ஐந்து அருவிகளாக விழுகிறது. வட-வருவியில்தான் பெரும்பாலோர் நீர் ஆடுவர். இதுவே **குற்றால நீர்வீழ்ச்சி** என்பது.

மலையிலுள்ள மூலிகைகளில் இந்த அருவி நீர் ஊறி வருவதால், பலவகைப் பிணிகளைப் போக்க வல்லதாய் இருக்கிறது. பல இடங்களிலிருந்து மக்கள் ஆனி, ஆடி மாதங்களில் இங்கு நீராட வருவார்கள். தென் மேற்குப் பருவக்காற்று வீசி இம்மலைக்கு மறுபுறத்தில் உள்ள மலையாள நாட்டில் அதிக மழை பெய்யும் பொழுது, இங்கும் சிறிது மழை பெய்யும். இதனை இங்குள்ளார் சாரல் மழை என்பர். இக்காலத்தில் அருவியில் நீர் அதிகமாகவும் தெளிவாகவும் விழும். இது இங்கு நீராடுவதற்கு ஏற்ற காலமாகும்.

குற்றாலமலையின் காட்சி இனிமையானது. அங்குப் பலவகைப்பட்ட மரம் செடி கொடிகள், நிறத்தாலும் வடிவத்தாலும் வேறுபட்ட மலர்களோடு விளங்கும். குரங்குகளின் விளையாட்டுக்கள், பறவைக் கூட்டங்கள் முதலியன மனத்துக்கு இன்பம் தருவனவாகும்.

அருவியில் நீராடும்பொழுது மக்கள் விழுந்து விடாதபடி பிடித்துக்கொண்டு நீராடுதற்கு இரும்புக் கம்பிகள் நட்டுள்ளார்கள். இதன் அருகில் உள்ள கோயிலும் மிகப் பழமையானது. தமிழின் தலைவரான அகத்தியர் வாழ்ந்த பெருமையையும் உடையது. இத்தகைய திருக்குற்றாலத்தை நேரில் கண்டால்தான் அதன் சிறப்பு விளங்கும்.

**கந்தன் :** வேலா, உனக்கு மிகவும் நன்றி! திருக்குற்றாலத்தின் சிறப்பை ஒருவாறு உணர்ந்தேன். இந்த விடுமுறைக்குத் தவறாமல் அங்குப் போவோம். அதனை நேரில் கண்டு களிப்போம்.

*அரும்பதங்கள் : விடுமுறை, சிவஸ்தலம், வாசஸ்தலம், குறும்பலா, சந்திக்கின்றன, அடிவாரம், மூலிகை, நீராடல், இன்பம், அருவி, ஒருவாறு, களிப்போம்.*

## பயிற்சி

1. விடை எழுது:

அ. திருக்குற்றுலம் எங்கே இருக்கிறது?

ஆ. திருக்குற்றுலத்தில் உள்ள சிவஸ்தலத்தின் பெருமைகள் யாவை?

இ. திருக்குற்றுலத்தைப் பற்றி நூல்கள் இயற்றியவர் யார்?

ஈ. நீலகிரிக்குத் தெற்கே மேற்கு மலைத் தொடரில் உள்ள மலைகளின் பெயர்கள் யாவை?

உ. குற்றுல மலையிலிருந்து தோன்றும் அருவிகள் யாவை?

ஊ. குற்றுல மலையின் சிறப்புக்கள் யாவை?

2. கோடுள்ள இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக:

அ. கோடையில் நமது நாட்டில்——அதிகம்.

(குளிர், பனி, வெப்பம்.)

ஆ. மேற்கு மலைத் தொடரும், கிழக்கு மலைத்தொடரும் ——என்னும் இடத்தில் சந்திக்கின்றன.

(கோடைக் கானல், ஏலமலை, நீலகிரிமலை.)

இ. குற்றுலம்———மலையில்———இருக்கிறது.

(யானை, அகத்தியர், உச்சியில், அடிவாரத்தில்.)

ஈ. அருவி நீர்———ஊறி வருகிறது.

(தரையில், மூலிகையில், மணலில்.)

3. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுதுக:

கோடை வாசஸ்தலம், நீராடல், அடிவாரம், களிப்பு, மூலிகை, அருவிநீர், உற்பத்தி, சந்திப்பு.



# 16. ஆறு

கல்லும் மலையும் குதித்துவந்தேன்;—பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி—எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன். 1

கட்டும் அணையேறிச் சாடிவந்தேன்;—அதன்
கண்ணறை தோறும் நுழைந்து வந்தேன்;
திட்டுத் திடர்களும் சுற்றிவந்தேன்;—மடைச்
சீப்புகள் மோதித் திறந்துவந்தேன். 2

காயும் நிலத்(து)அழல் ஆற்றிவந்தேன்;—அதில்
கண்குளி ரப்பயிர் கண்டு வந்தேன்;
ஆயும் மலர்ப்பொழில் செய்துவந்தேன்;—அங்கென்
ஆசை தீரவிளை யாடி வந்தேன். 3

ஏருத மேடுகள் ஏறிவந்தேன்;—பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்;
ஊருத ஊற்றிலும் உட்புகுந்தேன்;—மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன். 4

ஆயிரம் காலால் நடந்துவந்தேன்;—நன்செய்
அத்தனையும் சுற்றிப் பார்த்துவந்தேன்;
நேயம்உறப் புன்செய்க் காட்டிலும்—அங்கங்கு
நீரை இறைத்து நெடுக வந்தேன். 5

பஞ்சை அரைத்துநூல் நூற்றுவந்தேன்;—சீனி
பாகமாய்ச் செய்து கொடுத்துவந்தேன்;
நெஞ்சம் உலர்ந்த நெடுநகரில்—குழாய்
நீராக வுஞ்சென்று பாய்ந்து வந்தேன். 6

மாங்கனி தேங்கனி வாரிவந்தேன்;—நல்ல
வாச மலர்களும் அள்ளிவந்தேன்;
தீங்கரும் பாயிரம் தள்ளிவந்தேன்;—மிகத்
தேனும் தினையுமே சேர்த்து வந்தேன். 7

அல்லும் பகலும் அலைந்துவந்தேன்;—எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன்;
நில்லும்; எனக்கினி நேரமில்லை—இன்னும்
நீண்ட வழிபோக வேண்டும்அம்மா. 8

**—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

அரும்பதவுரை :

*1. விரிந்த—அகன்ற, தவழ்ந்து—நகர்ந்து.*
*2. அணை—அணைக்கட்டு, கண்ணறை—மதகு, மடைச் சீப்பு—மடைவாய்.*
*3. அழல்—வெப்பம், ஆற்றி—குளிரச் செய்து, பொழில்—சோலை.*
*4. ஏருதமேடு—நீர்ஏறிப் பாய முடியாத மேட்டுநிலம்.*
*5. ஆயிரம்கால்—ஆற்றின் பல கிளைகள், நேயம்—நட்பு.*
*6. சீனி—சர்க்கரை.*
*7. தேங்கனி—தேங்காய், வாசமலர்—நறுமணமலர்.*
*8. ஆழி இறைவன்—வருணன்.*

# 17. மௌன வாசிப்பு—II

**கீழ் வருவதை மனத்திற்குள் படித்து வினுக்களுக்கு விடை எழுது.**

1. மேல் நாட்டில் ஓர் ஊரில் செல்வர் ஒருவர் இருந்தார். அக்கால முறைமைப்படி இரண்டு சகோதரர்கள் அவரிடம் அடிமைகளாக இருந்தார்கள். அடிமைகள் தங்கள் முயற்சியால் பணம் சம்பாதித்துத் தம் எஜமானருக்குக் கொடுத்து விடுதலே பெறலாம். அந்த அடிமைகள் இருவரில் இளேயவன் புத்திசாலி; சுறுசுறுப்புள்ளவன்; நல்ல உழைப்பாளி. மூத்தவன் அவனுக்கு நேர் மாருனவன்.

2. இளேயவன் எஜமானர் வீட்டில் கிடைத்த ஓய்வு நேரங்களில் உழைத்து ஆயிரம் பவுன் சேர்த்து விட்டான். இளேயவன் மனத்தில் அண்ணனே அடிமை நிலேயினின்றும் விடுவிக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. அதனுல் அவன் ஆயிரம் பவுன்களேயும் எடுத்துக்கொண்டு எஜமானரிடம் சென்ருன்; ஆயிரம் பவுனே எஜமானன் முன் வைத்தான்; தன் அண்ணனே அடிமை நிலேயினின்றும் விடுதலே செய்ய வேண்டும் என்று வேண்டிக்கொண்டான்.

3. அதனேக் கண்ட எஜமானருக்குப் பேராச்சரியம் உண்டாயிற்று. அச்செல்வர் இளேயவனுடைய உழைப்பையும் புத்திசாலித்தனத்தையும் எண்ணி வியந்தார். அவர் அவனே நோக்கி, "நீ உன்னே விடுதலே செய்துகொள்ளாமல், ஏன் உன் உழைப்பால் சேர்த்த பணத்தைக் கொடுத்து, உன் அண்ணனே விடுவிக்கக் கேட்கின்ருய்?" என்று கேட்டார்.

4. அதற்கு இளையவன் எஜமானரைப் பணிந்து, ''ஐயனே, என் அண்ணன் என்னைப்போல அவ்வளவு புத்தியுடையவனும் அல்லன்; உழைப்பாளியும் அல்லன். அதிகமாகக் கஷ்டப்பட்டு வேலை செய்வது என்பது அவனால் ஆவதில்லை; அவனுக்கு உடல் நிலையும் இடம் தருவதில்லை. இந்தச்சமயத்தில் அவனை விடுதலையடையும்படி செய்யாவிட்டால், அவன் வாழ்நாள் முழுவதும் அடிமையாகவே இருக்க நேரிடும். ஆதலால் அவனை விடுவிப்பதை முதல் கடமையாகக் கொண்டேன். பின், நான் இன்னும் சிறிது காலத்திற்குள் என் புத்திசாலித்தனத்தாலும், உழைப்பாலும் என்னை விடுதலை செய்து கொள்வேன்,'' என்று பணிவாகக் கூறினான்.

5. அந்தப் பதிலைக் கேட்ட செல்வரின் மனம் கரைந்தது. அச்செல்வர், சகோதரருக்குள் இருந்த அன்பையும், ஒற்றுமையையும், தன்னலம் இல்லாத தன்மையையும் கண்டு, அவர்களிடம் அன்பு கொண்டு, அப்பொழுதே இருவரையும் விடுதலை செய்தார். அப்பணத்தையும் அவர்களுக்கே கொடுத்தார். சகோதரர் இருவரும் ஒற்றுமையோடு அப்பணத்தைக் கொண்டு தொழில் ஒன்றை நடத்தி இன்பமாய் வாழ்ந்தார்கள்.

**வினாக்கள்**

1. *அடிமைகளுள் இளையவன் எப்படிப்பட்டவன்?*
2. *மூத்தவன் எப்படிப்பட்டவன்?*
3. *இளையவன் சேர்த்த பணத்தை என்ன செய்தான்?*
4. *அடிமைகளைப்பற்றி எஜமானர் என்ன நினைத்தார்?*
5. *எஜமானர் அடிமைகளுக்குச் செய்த நன்மை யாது?*



# 18. மான வீரன்

[நாடகம்]

முதற்களம்

இடம் :—உறையூரில் சிறைச்சாலை
காலம் :—பகல்
பாத்திரங்கள் :—சிறைக் காவலர் இருவர், சேரன் பெருஞ்சேரல் இரும்பொறை

**சேரன் :—**[சிறைக்குள்ளிருந்து தனக்குத் தானே பேசிக் கொள்கிறன்.]

ஆ! என் வாழ்க்கையை என்னென்று கூறுவது! சேரர் குலம் எவ்வளவு பெருமையுடையது. அஃது இமயத்தில் வில்லைப் பொறித்த வேந்தர் குலம்! வடநாட்டு ஆரிய மன்னரைப் போரில் வென்ற வீரம் நிறைந்த வானவர் குலம்! கண்ணகியின் உருவம் சமைக்கக் கனகவிசயர் தலையில் கல்லை ஏற்றிக் கொண்டு

வந்த செங்குட்டுவன் பிறந்த குலம்! அத்தகைய சிறந்த குலத்தில் பிறந்த நான் இன்று எந்த நிலையில் இருக்கின்றேன்? சோழனது சிறைச்சாலையில் அல்லவா அடைப்பட்டிருக்கின்றேன். என்னை யார் இனி மதிப்பார்? வீரர் குலத்தில் தோன்றிய நான் அந்தக் குலத்திற்கு அழியா மாசினைத் தேடி வைத்துவிட்டேனே! எனது குலப் பெருமை என்னால் அல்லவா பழுதுபட்டது! புலவர் பொய்கையார் என்னைப் பற்றி என்ன நினைப்பார்? என்னை என் குடிமக்கள் எவ்வாறு தூற்றுவார்களோ, ஆ! நினைக்க நினைக்க என் மனம் பதறுகின்றதே!

காலையில் கொண்டு வைத்த உணவு அதோ கிடக்கின்றது! சங்கிலியால் பிணிக்கப்பட்ட நாய்க்கு இடும் சோறு போன்றதல்லவோ அது! அதனை உண்டு உயிர் வாழ்ந்திருப்பதா? என் உயிர் என் உடலிலிருந்து தானாகவே நீங்க வேண்டாவா? இன்னும் அது என் உடலில் தங்கி இருக்கின்றதே!

'மானங் கெட்டவனே, நீயும் ஓர் ஆண் மகனா? என்று என் மனம் என்னைக் கேட்கின்றது. என்ன பதில் கூறுவேன்? ஆ? நா வறள்கின்றது. *(சிறைக் காவலனைப் பார்த்து)* காவல, குடிக்க நீர் வேண்டும்.

**காவலாளன்** :—அவசரமோ! சற்றுப் பொறு. என் நண்பன் வந்திருக்கிறான். அவனிடம் பேசிவிட்டுப் பிறகு கொண்டு வருகிறேன்.

*[காவலாளன் பேசிவிட்டு மெல்லச் செல்கிறான். அவன் காலம் தாழ்த்துவதைக் கண்டு, சேரன் மனத்தில் சினமும் அவமானமும் தோன்றுகின்றன.]*

**[திரை]**

## இரண்டாம் களம்

இடம் :—உறையூரிலுள்ள சிறைச்சாலை
காலம் :—பகல்
பாத்திரங்கள் :—சேர மன்னன், சிறைக் காவலன்

[சிறைக் காவலன் ஒரு செம்பில் நீர் கொண்டுவந்து இடக்கையால் கொடுக்கிறான்.]

**காவலன் :**—இந்தாய்யா, தண்ணீர்.



**சேரன் :**—*(நீரை வாங்கிக் கொண்டு, தனக்குள்,)*

இக் காவலனுக்கு எவ்வளவு அலட்சியம்! இடக் கையால் அல்லவா நீர் தருகிறான்! அத்துடன் நின்றானா? மரியாதை யின்றியும் பேசுகிறான்! என்னை அவன் மன்னனாக மதிக்க வில்லையே! என் நிலை தாழாமல் இருந்திருந்தால் இவன் என்முன் எவ்வாறு நின்று நடுங்குவான்!

ஒருவன் தன் நிலையினின்றும் தாழ்தல் கூடாது. தாழ்வு வந்தால் உயிர் வாழ்தல் கூடாது. அதுவே மானியின் செயல் என்று பெரியோர் கூறுவர். 'மானம்

அழிந்தபின் வாழாமை முன் இனிதே'!—என்ன அருமை யான பொன்மொழி! ஆ ! இவற்றிற்கெல்லாம் விளக்க மான உரையைப் புலவர் பொய்கையார் உரைக்கக் கேட்டேனே ! கேட்டு என்ன பயன்?

இந்த நீரைக் குடித்து உயிரை வைத்துக்கொண்டு என்ன செய்யப் போகிறேன் ? சிறையிலிருந்து மீண்டால் எங்குச்செல்வது? நாட்டுக்கும், குலப்பெருமைக்கும் கேட்டை விளைவித்துவிட்டு,வெட்கமின்றி மீண்டும் சிம்மாசனத்தில் அமர்ந்து ஆட்சி புரிவதா ? அவ்வாறு ஆளச்சென்றால் நாட்டிலுள்ளார் என்ன நினைப்பர் ? என் சொல்லுக்கு மதிப்பு உண்டோ ?



ஏன் இத்தனை எண்ணங்கள் ! ஆறிலும் சாவு; நூறிலும் சாவு. வீரன் சாவுக்கு அஞ்சுவதா ? இந்த நீரும் வேண்டா ; என் உயிரும் வேண்டா—எனக்கு இனி வாழ்க்கையும் வேண்டா—ஆ !

*[செம்பினைத் 'தொப்'பென்று எறிந்து சேரன் 'இடும்' என விழுந்து இறக்கிறான். சேவகன் சத்தம் கேட்டு வரு கிறான். சேரன் இறந்து கிடத்தலைப் பார்க்கிறான்]*

**காவலன் :**—ஆ ! செம்பு உருண்டு கிடக்கிறதே ! நீர் சிந்திக் கிடக்கின்றதே ! சேரன் பிணமாய்க் கிடக்கின்றானே ! ஆ ! நீர் கேட்டான் ; கொண்டு வந்து கொடுத்தோம். இவன் நீரைக் குடிக்கவில்லையே. நீர் முழுவதும் சிந்திக் கிடக்கின்றதே. ஆ ! இவன் மான முள்ளவன். இவன் காலையில் வைத்த உணவையும் உண்ணவில்லை. சிறைக்குள்ளே சுற்றிக் கொண்டு ஏதேதோ தனக்குள் பிதற்றிக் கொண்டிருந்தான். இவன் மனம் உடைந்துவிட்டது! வீரன் அல்லவா! சரி, இதை நாம் மன்னனுக்கு அறிவிப்போம்.

[திரை]

## மூன்றும் களம்

| |
|---|
| **இடம்** :—*உறையூரில் சோழன் அரண்மனை*<br>**காலம்** :—*பிற்பகல்*<br>**பாத்திரங்கள்** :—*புலவர் பொய்கையார், அரண்மனை வாயிற்காவலன், சோழன் கோச்செங் கணான், சிறைக்காவலன்.* |

பொய்கையார் :—வாயிற்காவல ! பொய்கையார் என்னும் புலவர் வந்திருப்பதாக உன் அரசனுக்கு அறிவி.

வாயிற்காவலன் :—ஐயா, இங்குச் சற்றுத் தங்கி இருங்கள்.

*[அரசனது கொலு மண்டபம் அடைந்து வாழ்த்தி வணங்கி]*

மன்னர் மன்ன ! பொய்கையார் என்னும் புலவர் அரசரைக் காண அரண்மனை வாயிலில் வந்துள்ளார் ! உத்தரவு யாதோ ?

**சோழன்** :—காவல! விரைந்து சென்று அவரை அழைத்து வா, தாமதிக்காதே.

*[காவலன் விரைந்து வந்து, புலவரை உள்ளே விடு கிருன். பொய்கையார் கொலு மண்டபத்தை அடைகிருர்.]*

**சோழன்** :—*(எழுந்து நின்று வணங்கி)* வருக! புலவீர் வருக! தாங்கள் இங்கு வந்தது என் பாக்கியமே. *(ஆசனத்தைக் காட்டி)* இதில் அமருங்கள்.

**பொய்கையார்** :—மன்ன! உனக்கு வெற்றியுண்டாகுக! அவசரமாக உன்னைக் காண வந்தேன், இந்த அவசரத்திலும் உன்மீது நாற்பது பாடல்கள் கொண்டதான 'களவழி நாற்பது' என்ற நூலைப் பாடி வந்துள்ளேன். கேட்டருள்க.

**சோழன்** :—எனது பாக்கியம்!

*[பொய்கையார் களவழி நாற்பதைப் படித்துக் காட்டல்]*

ஆ என்ன சுவை! என் போர்ச் சிறப்பையன்றே கூறியுள்ளீர்! உங்கள் ஆசியே எனக்கு வெற்றியளித்தது. நீங்கள் வேண்டும் பரிசில் யாதோ?

**பொய்கையார்** :—நான் கேட்பதை நீ தருவது இயலாது என்று எண்ணுகின்றேன்.

**சோழன்** :—ஏன் அவ்விதம் கூறுகிறீர்? எதைக் கேட்டாலும் தருவேன். சொன்ன சொல் தவற மாட்டேன்.

**பொய்கையார்** :—நீ தவருய். ஆனுல்......

**சோழன்** :—ஆனுல் என்ன?

**பொய்கையார்** :—அவன் உயிரை வைத்திருக்க வேண்டுமே!

**சோழன்** :—எவன்?

**பொய்கையார் :**—சேரன்தான். சேரன் பெருஞ் சேரல் இரும்பொறை என் மாணவன். அவன் சிறந்த வீரன்; தமிழை நன்கு உணர்ந்தவன். அவன் மான உணர்ச்சி மிக்கவன். சிறைப்பட்டவுடனே உயிரை விட்டிருப்பான்! இருந்தாலும் ஆசை வெட்கம் அறியாதல்லவா? சோழப் பெருந்தகையே, நான் உன்னை வேண்டுவது பொன் அன்று; பொருளும் அன்று; என் மாணவன் சேரனது விடுதலையே. அவனை விடுதலை செய்தருள்க.



**சோழன் :**—அப்படியா! இதோ விடுவிக்கின்றேன். நாம் இருவரும் சிறைச்சாலைக்குச் சென்று சேரனை அழைத்துக்கொண்டு வருவோம் வாருங்கள்.

[சோழனும் பொய்கையாரும் சிறைச்சாலை நோக்கிப் போகின்றனர். இடை வழியில் சிறைக் காவலன் ஓடோடி வந்து சோழனை வாழ்த்திப் பணிந்து, சேரன் இறந்த செய்தியை அறிவிக்கிறன்.]

**பொய்கையார்:**--வளவ! கேட்டாயா? நான் நினைத்தது போலவே ஆயிற்று. தம் நிலைக்குத்தாழ்வு வந்தால்

உயிர் வாழ்வரோ தக்கோர்? சேரன் மான வீரன் அல்லனோ! ஆ! பெறலரும் மணியை இழந்தேனே! இக் கொடுமையைக் காணும் விதி எனக்கு நேர்ந்ததே!

**சோழன்** :—விரைந்து வாருங்கள்; வருந்த வேண்டா. எல்லாம் விதியின் செயல். சேரனது உடலம் அரசர்க்குரிய மரியாதைகளுடன் அவன் நாட்டிற்கு அனுப்பப்படும். இறந்தவரைக் குறித்து வருந்திப் பயன் என்ன? நீர் அறியாதது ஒன்றும் இல்லை. இனிச் செய்ய வேண்டியதைக் கவனிக்க வேண்டுகிறேன். புலவர் பெருமானே, நும் மாணவனுக்குக் கேடு சூழ்ந்தவன் ஆனேன் நான். இப்பழி நீங்க, நான் எழுபது ஆலயங்கள் கட்டுவிப்பேன். புலவரே, தாங்கள் சேர நாட்டிற்குச் சென்று, சேரன் உடலை அடக்கம் செய்துவிட்டு இங்கு என்னுடன் தங்கள் வாழ்நாள் முழுவதும் தங்கியிருக்க வேண்டுகின்றேன்.

**பொய்கையார்** :—மன்னவ! வேறென்ன செய்யக் கூடும்? மான வீரன் உடலை விரைவில் அனுப்புக. நான் விடைபெற்றுக் கொள்கின்றேன்.

**சோழன்** :—புலவர் சிங்கமே! அவ்வாறே செய்கிறேன். நான் வேண்டிக்கொண்டபடி தாங்கள் என்னுடன் இருந்தருள வேண்டும்.

பொய்கையார்:—அதுவும் இறைவன் திருவுள்ளம். சென்று வருகிறேன்.

**[திரை]**

*[பொய்கையார் சேர நாடு நோக்கிச் சென்றார். சோழன் அரண்மனைக்குச் சென்றான். சேரனது உடல், ஆடை அணிகளால் அலங்கரிக்கப்பட்டு, தேரில் வைக்கப்பட்டு நால் வகைச் சேனைகளும் சூழ்ந்து செல்லச் சேர நாட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டது.]*

அரும்பதங்கள் : சிறை, பொறித்த, வேந்தர், சமைக்க, மாசு, பதறுகிறது, மானம், அலட்சியம், தாழ்வு, எண்ணம், பிதற்று, கொலுமண்டபம், பாக்கியம், கேட்டருள், பிணிக் கப்பட்ட.

## பயிற்சி

1. விடை எழுது :

அ. சிறைப்பட்டிருந்தவன் யாவன் ?

ஆ. அவனைச் சிறையில் வைத்தவர் யார் ?

இ. சிறையிலிருந்தவன் ஏன் உயிரை விட்டான் ?

ஈ. அவனைத் தேடிவந்த புலவர் எவர் ?

உ. அவர் பாடிக் கொண்டுவந்த நூல் யாது ?

2. எதிர்ப்பதங்கள் எழுதுக :

மானம்✕
அலட்சியம்✕
தாழ்வு✕
வேண்டும்✕
வருத்தம்✕

3. கீழே உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது:

வாழ்க்கை–வீரம்–குலம்–மதிப்பார்–பழுதுபட்டது –பிணிக் கப்பட்ட–பாக்கியம்–மானம்–அலட்சியம்–தாழ்வு.

# 19. நீரைக் கடத்தல்

1. வாழ்க்கைக்குரிய வசதிகள் உள்ள இடத்தில் குடியேறி வசிப்பது மக்களின் இயல்பு. ஆறுகள், ஏரிகள், கடல் என்பவற்றை அடுத்துக் குடியேறி வாழ்வதால் சில நன்மைகள் உண்டு. பயிர்த் தொழிலுக்கு நீர் தேவை அன்றோ? நீர்நிலைகளின் அருகில் வசித்தால் பயிரிடுவதற்கு வசதியாக இருக்கும். மேலும் நீர்நிலைகளின் அருகில் வசிப்பவர்கள் பயிர் செய்வதையன்றி, மீன் பிடித்தலையும் தம் தொழிலாகக் கொண்டனர். ஆறு, ஏரிகளைக் காட்டிலும் கடலில் மீன் பிடித்தல் பெரு வருவாயை அளிப்பதாகும். முற்காலத்தில் நீர்நிலைகளின் கரைகளிலிருந்தும், நீரில் முடிந்தவரை இறங்கியும் மீன் பிடித்தனர்.





2. நீரில் வெள்ளம் மிகுந்து வரும் காலங்களில் அதில் பெரிய மரங்களும் மிதந்து வருதலை மக்கள் கண்டனர். எனவே, மரத்துண்டுகள் இரண்டு, மூன்றைக்கட்டி நீரில் போட்டால் அவை மிதக்கும்; அவற்றில் ஏறி நீரின்மேல் செல்லலாம் என்பதை அறிந்தார்கள். எனவே, கனம் குறைந்த மரத்துண்டுகள் இரண்டு மூன்றுகளைச் சேர்த்துக் கட்டி, அவற்றின் மூலம் நீரைக் கடக்க முயன்றனர். அதுவே கட்டுமரம் எனப்பட்டது. கட்டுமரத்தைத் துடுப்புக் கொண்டு, தள்ளி நீரில் செலுத்தினர்.

3. மக்கள் ஆறுகளைக் கடக்க மூங்கில்களைச் சிம்புகளாக்கிக் கூடைபோல வளைத்துக் குழிவாக அமைத்து, வெளிப்புறத்தை விலங்குகளின் தோல் களால் போர்த்திப் பரிசல் செய்து உபயோகித்தனர்; பின்னர் மிகப் பருத்த மரத்துண்டுகளை வட்டமாகவும், நீளமாகவும் குடைந்து மிதக்கவிட்டு நீர் நிலைகளைக் கடந்தனர். வட்டமாகக் குடையப்பட்டதற்குக் குல்லா என்பது பெயர்.



4. துடுப்பால் தள்ளிச் செல்வது என்பது சிறிது தூரம் செல்வதற்கே இயலும்; நெடுந் தொலைவு செல்வதற்கு இயலாதல்லவா ? எனவே, மரங்களைப் பலகைகளாக அறுத்து, உட்புறம் குழிவாக வளைத்தனர். அத்தகைய பலகைகள் பலவற்றை ஒன்றாக இணைத்துப் படகு அமைத்தனர். அதன் இருபுற ஓரங்களிலும் சிலர் அமர்ந்து துடுப்புக்களால் தள்ளி நீரைக் கடந்தனர். இதனைப் படகு என்றனர். இதற்குத் தோணி, ஓடம் என்னும் வேறு பெயர்களும் உண்டு. இவையெல்லாம் நீரில் நெடுந்தொலை செல்ல முடியாதல்லவா?

5. படகுகளில் ஏறிக் கடலில் சென்ற பொழுது, அங்குக் காற்றுக் கடுமையாக வீசுவது கண்டு, மக்கள் தங்கள் படகுகளைப் பெரிய வடிவில் அமைத்தனர்.

அதற்கு மரக்கலம் என்பது பெயர். துடுப்பால் தள்ளுத-லின்றித் தானே காற்றின் உதவியால் செல்லுமாறு அந்த மரக்கலங்களுக்குப் பாய் மரங்கள் அமைத்தனர். மரக்கலத்தில் இரண்டு மூன்று கம்பங்கள் நட்டு, அவற்றில் பாயை இணைத்தனர். இக்கம்பங்கள் பாய் மரங்கள் எனப்படும். காற்று அடிக்கும் பொழுது அப்பாய் காற்றைத் தடுக்கும். அதனால் கலம் தள்ளப்-



படும். அப்பொழுது காற்று வீசும் திசையில் மரக்கலம் செல்லும். காற்றின் எதிர்ப்புறம் செல்ல வேண்டு-மானால், பாய்களை இறக்கிவிட்டுப் பக்கத்துக்குப் பலராக அமர்ந்து துடுப்பைச் சுழற்றி மரக்கலத்தைத் தள்ளுவர். இதற்குப் பாய்மரக் **கப்பல்** என்பது பெயர்.

6. மனிதன் தன் அறிவின் வலிமையால் உலோ-கங்களின் பயன்களைக் கண்டறிந்தான்; இரும்பால் எல்லா வகையான பொருள்களையும் செய்து பயன் படுத்தத் தொடங்கினான். விஞ்ஞான அறிவை மனிதன் பெருக்கிப் புதிய புதிய பொருள்களைக் கண்டுபிடிக்கத் தொடங்கினான். நீராவிக்குத் தள்ளும் சத்தி உண்டு என்பதை **ஜேம்ஸ் வாட்டு** என்பவன் கண்டுபிடித்தான்.

**ஜேம்ஸ் வாட்டு, நீராவியின் சக்தியைக் கண்டுபிடித்த பின்னர், ஜார்ஜ் ஸ்டீவென்ஸன்** என்பவன் நீராவியைக் கொண்டு இரயில் இயந்திரம் ஓடும்படி செய்தான். அதனால் விளைந்த நலத்தை அறிந்து கப்பலை ஓட்டவும் நீராவியை உபயோகித்தனர். இத்தகைய கப்பல் **நீராவிக் கப்பல்** எனப்படும்.



7. தமிழ் நாட்டினர் மிகப்பழைய காலந்தொட்டு மரக்கலங்களில் கடல் மேல் சென்றனர் என்பது தெரிகிறது. அவர்கள் பாய் மரக் கலங்களைக் கொண்டு பிற நாடுகளை வென்றும், அவற்றோடு வாணிகம் செய்தும் செல்வம் திரட்டி வந்தனர் என்றும் அறிகிறோம். "**திரைகடல் ஓடியும் திரவியம் தேடு,**" என்பது இதனை நன்கு விளக்கும்.

நீரைக்கடத்தல்

*அரும்பதங்கள்: வசதிகள், மிதந்து, கட்டுமரம், துடுப்பு, சிம்புகள், போர்க்கு, பரிசல், தல்லா, தொலைவு, குழிவு, கடந்தனர், மரக்கலம், பாய்மரம், பாய்மரக்கப்பல்.*

## பயிற்சி

1. விடை எழுது :

அ. ஆதிகாலத்து மக்கள் எவ்விடங்களில் அதிகமாக வசித்தார்கள்?

ஆ. ஆதிகாலத்து மக்களுக்கு நீரைக் கடந்து செல்ல முடியும் என்ற எண்ணம் எப்படித் தோன்றியது?

இ. கட்டுமரம் என்பது என்ன? அதற்கு ஏன் அப்பெயர் வந்தது?

ஈ. பாய்மரக் கப்பல் எவ்வாறு செலுத்தப்பட்டது?

உ. இக்காலத்துக் கப்பல் எதன் சத்தியால் செல்கின்றது?

2. கீழே உள்ள சொற்களை வாக்கியங்களில் அமைத்து எழுது :

கட்டுமரம் – அமர்ந்து – பயன் – நீராவி – சக்தி – தோல் – செல்வம் – திரட்டி – நன்கு.

3. எது எதனோடு பொருந்தும்?

| | |
|---|---|
| வசதியான இடங்களில் குடியேறுவது | விலங்குகளின் தோலைக் கொண்டு செய்யப்படும். |
| நீர் நிலைகளின் அருகில் வசிப்பதால் | சிறிது தூரம் செல்லவே பயன்படும். |
| பரிசல் என்பது | நீராவியால் செல்கிறது. |
| தெப்பம் என்பது | சில நன்மைகள் உண்டு. |
| இக்காலக் கப்பல் | மக்கள் இயல்பு. |



# 20. முரசுப் பாட்டு

ஊருக்கு நல்லது சொல்வேன்:—எனக்கு
உண்மை தெரிந்தது சொல்வேன்:
சீருக்கெல் லாம்முத லாகும்—ஒரு
தெய்வம் துணைசெய்ய வேண்டும். 1

சாதிக் கொடுமைகள் வேண்டா;—அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்;
ஆதர வுற்றிங்கு வாழ்வோம்;—தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம். 2

தெய்வம் பலபல சொல்லிப்—பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்;
உய்வ தனைத்திலும் ஒன்றாய்—எங்கும்
ஓர்பொரு ளானது தெய்வம். 3

யாரும் பணிந்திடும் தெய்வம்;—பொருள்
யாவிலும் நின்றிடும் தெய்வம்;
பாருக்குள் ளேதெய்வம் ஒன்று;—இதில்
பற்பல சண்டைகள் வேண்டா. 4

உடன்பிறந் தார்களைப் போலே—இவ்
வுலகில் மனிதரெல் லாரும்;
இடம்பெரி துண்டுவை யத்தில்;—இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்? 5

அன்பென்று கொட்டு முரசே!—மக்கள்
அத்தனை பேரும் நிகராம்;
இன்பங்கள் யாவும் பெருகும்—இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால். 6

—பாரதியார்

*குறிப்புரை :*

1. *சீர்—பெருமை*
2. *வையம்—உலகம். மாண்புற—பெருமையுற*
3. *உய்வது—உயிர் வாழும் பிராணி*
4. *முரசு—ஒருவகைத் தோற் கருவி. நிகராம்—ஒப்பாம்*



# 21. மாமல்லபுரம்

1. தமிழகத்தை ஆண்ட அரசர்களுள் பல்லவர் என்பார் ஒரு வகுப்பினர். அவர்கள் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றிக் காஞ்சீபுரத்தைத் தலை-நகராகக் கொண்டு ஆண்டு வந்தார்கள். அவர்கள் காலத்தில் சோழநாடும் அவர்கள் ஆட்சிக்குட்பட்-டிருந்தது. தமிழகத்தில் பல கற்கோயில்களைக் கட்டு-வித்து நாட்டை அழகுபடுத்தியவர்கள் பல்லவர்களே. அப்பல்லவர்களுள் தலைசிறந்தவர் மகேந்திரவர்மரும் அவர் மைந்தர் நரசிம்மவர்மரும் ஆவர். அவர்கள் மலைகளையும் பாறைகளையும் குடைந்து கோயில்கள் அமைத்தார்கள்; சிற்பங்களைச் செதுக்குவித்தார்கள்.

2. தென்னாட்டில் முதல்முதல் கருங்கல்லால் கோவில் கட்டியவர் மகேந்திரவர்மரே ஆவர். மேலும், அவர் சிற்பிகளைக்கொண்டு மலைகளைக் குடைந்து மண்டபங்கள் அமைத்து அவற்றில் அழகிய உருவங்-களைச் செதுக்கினார். அத்தகைய சிற்பங்கள் நிறைந்த இடங்கள் பல, தமிழ் நாட்டில் உள்ளன. அவற்றுள் ஒன்று மாமல்லபுரம். அது இக்காலத்தில் மகாபலி புரம் என வழங்குகிறது.

3. நரசிம்மவர்மர், மகேந்திரவர்மரின் புதல்வர் ஆவார். அவருக்கு மாமல்லர் என்பது பட்டப்பெயர். அவர் தம் பட்டப்பெயரால் பல்லவ நாட்டின் துறை முகப்பட்டினத்துக்கு **மாமல்லபுரம்** என்னும் பெயரை வழங்கினர். இதற்குக் **கடன்மல்லை, தலசயனம்** என்னும் வேறு பெயர்கள் அக்காலத்தில் வழங்கி வந்தன. அக்காலத்தில் கடற்கரைப் பெருநகராய் விளங்கிய மாமல்லபுரம், இன்று ஒரு சிறு கிராமமாகக் காட்சி யளிக்கிறது. அது சென்னைக்குத் தெற்கில், முப்பத்தைந்து மைல் தொலைவில், கடற்கரையோரத்தில் இருக்கிறது.

4. அது முற்காலத்தில் ஒரு சிறந்த துறைமுகப் பட்டினமாய்த் துலங்கிற்று; அக்காலத்தில் தமிழர் அங்கிருந்து மரக்கலங்களிற் புறப்பட்டுச் **சிங்களம், சாவகம், கடாரம்** என்னும் நாடுகளுக்குக் கப்பலில் சென்று வாணிகம் செய்து வந்தனர். பல்வேறு நாட்டுக் கலங்களும் மாமல்லபுரத் துறையில் வந்து தங்கின. அதனுல் " **கலங்கள் இயங்கும் கடன் மல்லை,**" என்று பெரியோர் புகழ்ந்தனர்.

5. மாமல்லபுரத்துக்குச் செங்கற்பட்டு ரயில்வே நிலையத்தில் இறங்கித் திருக்கழுக்குன்றத்தின் வழியாகச் செல்லலாம். பக்கிங்காம் கால்வாய் மூலம் படகிலும் போகலாம். மாமல்லபுரத்தில் இக்காலத்தில் கட்டப்பட்ட கலங்கரை விளக்கம் ஒன்று இருக்கிறது. முற்காலத்திலும் இங்கு ஒரு கலங்கரை விளக்கம் இருந்தது. அதை இப்போதும் நாம் அங்குக் காணலாம். மகேந்திரவர்மரால் தொடங்கப் பெற்று, நரசிம்ம வர்மரால் உருவாக்கப்பட்ட சிற்பங்களில் சிதைந்து அழிந்தவை போக, எஞ்சி இருப்பவை இன்று செய்தனபோலக் காணப்படுகின்றன.

6. அங்குள்ள கோயில்களுள் மகிஷாசுர மர்த்தனி கோயில் என்பது ஒன்று. அது ஒரு குகைக் கோயில். குகைக் கோயில் என்பது ஒரு குன்றைக் குடைந்து கோயிலாக அமைப்பதாகும். ஒரே பாறையைக் குடைந்து அமைப்பது ஒற்றைக்கல் கோயில் எனப்படும். மகிஷம் என்ருல் எருமை; அசுரன் என்ருல் அரக்கன்; மர்த்-தனி என்ருல் கொன்றவள் என்பது பொருள். எரு-மையின் தலையைப் பெற்ற அரக்கனைக் கொன்ற தேவி மகிஷாசுர மர்த்தனி. இச்சிற்பம் மிகவும் அழகாக விளங்குகிறது.

7. மற்ருேர் இடத்தில் ஐந்து விமானங்கள் உள்-ளன. அவை ஒற்றைக் கற்கோயில்கள். அவற்றைப் பஞ்சபாண்டவ ரதங்கள்' என்று கூறுகின்றனர். ஆனுல் இந்த ரதங்களுக்கும் பஞ்சபாண்டவருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. கல்லில் செதுக்கப்பட்-டனவாக ஒரு யானையும் ஒரு சிங்கமும் உள்ளன. துர்க்காதேவியின் சிலையும், அதன் எதிரில் வீரன் ஒரு-வன் தன்தலையைத் தானே வெட்டித் தேவிக்குப் பலி இடும் சிலையும் உள்ளன. பீம ரதத்தின் முன்னும் பின்னும் மண்டபங்கள் உள்ளன. மற்ற ரதங்கள் முற்றுப் பெருதவை.

8. ஒரு பெரிய பாறையின்மீது பல உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று, ஒருவன் ஒற்றைக்காலில் நின்று, தவம் செய்யும் நிலையில் இருக் கிறது. இதனை அருச்சுனன் தவம்' என்றும், 'பகீ-ரதன் தவம்' என்றும் கூறுவர். பல வகை மனித உரு-வங்களும், விலங்குகளின் உருவங்களும், பறவைகளின் உருவங்களும் தவம் செய்யும் உருவத்தைச் சுற்றிலும் காணப்படுகின்றன. பூனை ஒன்று தவம் செய்வது போன்ற சிற்பம் மிகவும் அழகு வாய்ந்தது.

9. கடற்கரை ஓரத்தில் ஒரு கோயில் உள்ளது. அது பல கருங்கற்களால் கட்டப்பட்டது. அங்கிருந்தவற்றில் சில பகுதியைக் கடல் கொண்டுவிட்டது. இந்நகர் **பூதத்தாழ்வார்** என்ற பெரியார் தோன்றிய தலமும் ஆகும். மாமல்லபுரம் நம் முன்னோரின் சிற்பக் கலையின் திறத்தை விளக்கும் இடமாகும். இச்சிற்பங்களின் அழகினை எழுதிக்காட்ட இயலாது. நேரில் சென்று கண்டு களிக்க வேண்டும்.

அரும்பதங்கள் : வகுப்பினர், கைப்பற்றி, உட்பட்டிருந்தது, மைந்தர், சிற்பி, புதல்வர், தொலைவு, துலங்கிற்று, வாணிகம், தீபஸ்தம்பம், கலங்கரை விளக்கம், குடைந்து.

**பயிற்சி**

1. விடை எழுது :
   1. பல்லவ இராச்சியத்தின் தலைநகரமும், துறைமுகமும் எவை?
   2. பல்லவ மன்னருள் சிறந்தவர் யாவர்?
   3. அவர்கள் செய்த சிறந்த செயல் யாது?
   4. பஞ்சபாண்டவ ரதங்கள் என்பவை யாவை?
   5. குகைக்கோயில் என்பது யாது?
   6. மாமல்லபுரத்துக்கு ஏன் அப்பெயர் வழங்கியது? அதற்கு வழங்கிய வேறு பெயர்கள் யாவை?
2. கோடுள்ள இடங்களைத் தகுந்த சொற்களில் நிரப்புக :
   அ. பல்லவ மன்னருள் சிறந்தவர்———
   (நெடுஞ் செழியன், நரசிம்மவர்மர், செங்குட்டுவர்.)
   ஆ. மாமல்லபுரம்————துறைமுகம்.
   (சாதாரணமான, ஒப்பற்ற.
   இ. மாமல்லபுரத்தில்———சிதைந்துள்ளன.
   (ஓவியங்கள், சிற்பங்கள், கற்கள்.)
   ஈ. பஞ்சபாண்டவ ரதங்களுக்கும்————தொடர்பில்லை.
   (பல்லவர்களுக்கும், சோழ மன்னர்கும், பஞ்சபாண்டவர்க்கும்)
3. கீழே உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது:
   குடைந்து – சிற்பம் – கலங்கரைவிளக்கம் – வாணிகம் – சிதைந்து – திரள் – களிப்பு.



# 23. கடிதத்தின் பிரயாணம்

**வேலன்** : அப்பா, தபால்காரர் உங்களுக்கு ஒரு கடிதம் கொடுத்தார். இது எங்கிருந்து வந்தது ?

**தந்தை** : அதை இப்படிக் கொடு. சொல்லுகிறேன். வேலா, இது தஞ்சாவூரிலிருந்து வந்திருக்கிறது.

**வேலன்** : அது எப்படி யப்பா தெரிகிறது ?

**தந்தை** : இதோ பார். கடிதத்தின் மீது ஒட்டப்பட்டுள்ள தபால் பில்லைகளின் மீது முத்திரை அடிக்கப்பட்டிருக்கிறது. அம்முத்திரையைப் பார். அதில் கடிதம் எங்கிருந்து வருகிறதோ அந்த ஊரின் பெயர் இருக்கிறது. அது அனுப்பப்பட்ட தேதி இருக்கிறது.

**வேலன்** : இது எனக்குத் தெரியாது. ஓர் ஊரில் போடப்படும் கடிதம் அது போக வேண்டிய இடத்துக்கு எப்படிப் போய் சேர்கிறது என்பதை விளக்கிக் கூறுங்கள், அப்பா.

**தந்தை** : அப்படியே சொல்கிறேன்; கேள். நீ உன் அண்ணனுக்குக் கடிதம் எழுதுகிறாய். அதை என்ன செய்கிறாய் ?

**வேலன் :** அதை உறையில் இட்டு ஒட்டுவேன். மேலே அண்ணாவின் முகவரியை எழுதுவேன். இரண்டணாத் தபால் பில்லையை அதன் மீது ஒட்டி, அதைத் தபாற் பெட்டியிற் போடுவேன்.

**தந்தை :** தபாற் பெட்டியின் மீது, அதனுள் இருக்கும் கடிதங்கள் எடுக்கப்படும் நேரம் குறிக்கப்பட்டிருக்கும். அந்த மணிப்படி தபாற்காரர் தபாற் பெட்டியைத் திறந்து, அதனுள் இருக்கும் கடிதங்களை எடுத்துச் செல்வார்.

**வேலன் :** அக்கடிதங்களை எங்கே கொண்டு செல்வார்?

**தந்தை :** கடிதங்களைத் தபால் ஆபீசுக்குக் கொண்டு போவார். **'ஆபீஸ்'** என்பது ஆங்கிலப் பதம். அதற்கு **'அலுவல் அகம்'** என்பது தமிழ். அலுவலகத்தில் அக்கடிதங்களின் மீது முன்னே கூறப்பட்டபடி முத்திரை அடிக்கப்படும். பிறகு ஒவ்வோர் ஊருக்கும் போக வேண்டிய கடிதங்களைப் பிரிப்பர். பிரித்தவற்றைத் தனித்தனி உறைகளில் இட்டுக்கட்டி வண்டிகளில் ஏற்றுவர். வண்டியில் ஏற்றப்பட்ட பைகள், புகை வண்டி நிலயத்துக்குக் கொண்டு செல்லப்படும். புகை வண்டித் தொடரில் தபால்கள் கொண்டு செல்வதற்கென ஒரு தனிப் பெட்டி சேர்க்கப்பட்டிருக்கும். அப்பெட்டியில் தபால் பைகள் ஏற்றப்படும். இரயில் போகும்போது அதில் உள்ள அலுவலாளர், அப்பைகளை இறக்க வேண்டிய இடங்களில் இறக்கிவிடுவர். அங்கிருந்து அவை அந்த ஊர் தபால் அலுவலகத்துக்குக் கொண்டு செல்லப்படும். அங்கு அந்தப் பைகளைத் திறந்து, கடிதங்களை எடுத்து, ஒவ்வொன்றின்மீதும் அந்த ஊர் அலுவலகத்தின் முத்திரை அடிக்கப்படும். பிறகு அவற்-

றைத் தபால்காரர்கள் கொண்டு போய் முகவரி-யில் குறிக்கப்பட்டிருப்பவர்களுக்குக் கொடுப்பார் கள். இதனைக் கடிதத்தின் பிரயாணம் என்று கூறு வது பொறுத்தமாக இருக்கிறது அல்லவா ?

**வேலன் :** கடிதம் ஓர் ஊரிலிருந்து மற்ருேர் ஊருக்கு எப்படிச் செல்கிறது என்பது இதுவரை எனக்குத் தெரியாது. இன்று தெரிந்துகொண்டேன், அப்பா.

**பயிற்சி**

1. உனக்கு இரண்டு நாட்கள் விடுமுறை தரும்படி கேட்டு உன் ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுது.

2. சில புத்தகங்கள் வாங்குவதற்குப் பணம் வேண்டு மெனத் தெரிவித்து, உன் தந்தையாருக்கு ஒரு கடிதம் எழுது.



# 24. மனிதருள் மாணிக்கம்

1. இந்தியா சிறந்த தேசபக்தர்களையும், கவிஞர்களையும் அவ்வப்போது தோற்றுவித்துள்ளது. மகாத்மா காந்தியடிகள் தோன்றி இந்தியாவிற்கு அழியாப் புகழை உண்டாக்கிவிட்டார். மேல் நாடுகளுக்குச் செல்லும் இந்தியரைப்பார்த்து அங்குள்ளவர்கள் 'காந்தி நாட்டவரா நீங்கள்?' என்று கேட்பதால், காந்தியடிகளின் பெருமையை அறியலாம். காந்தியடிகளைப் பின்பற்றி நடப்பவருள் முதன்மையானவர் **ஜவாஹர் லால் நெஹ்ரூ.** இவரே இன்று நம்நாட்டின் பிரதம மந்திரியாக விளங்குகிறார்.

2. ஜவாஹர்லால் நெஹ்ரு காஷ்மீரத்துப் பண்டிதர் மரபில் பிறந்தவர். இவர் தந்தையார் **மோதிலால் நெஹ்ரு** என்பவர் ஆவர். இவர் தாயாரின் பெயர் **சொரூபராணி** என்பது. மோதிலால் நெஹ்ரு அலாஹாபாத்து உயர்நீதி மன்றத்தில் நியாயவாதியாக இருந்து புகழ் பெற்றவர் ; நிறைந்த செல்வமும் படைத்தவர்.

3. ஜவாஹர்லால் நெஹ்ரு 1889-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ஆம் தேதி பிறந்தார். இவருக்கு **விஜயலட்சுமி, கிருஷ்ணு** என்ற சகோதரிகள் இருவர் இருக்கின்ருர்கள். இளமைப் பருவத்தில் நெஹ்ருவிற்குக் கல்வி கற்பித்தவர் **ப்ரூக்ஸ்** என்ற அயர்லாந்தினர். அவர் சிறந்த படிப்பாளி. அவர் ஜவாஹருக்கு ஆங்கிலம் கற்பித்தார். பகவத்கீதை என்னும் நூலேப் போதித்தார். நாட்டின் பெருமைகளே எடுத்துக் கூறி நாட்டுப்பற்றையூட்டினுர்.

4. ஜவாஹர் தம் பதினேந்தாம் வயதில் இங்கிலாந்துக்குச் சென்ருர். அங்கு அவர், அரச குமாரர்களும் பிரபுக்களின் புதல்வர்களும் படிக்கும் 'ஹாரோ' பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்தார். பரீட்சைகளில் முதல்வராய்த் தேர்ந்து பல பரிசுகளும் பெற்ருர். பின்னர் அவர் 'ட்ரினிடி' கல்லூரியில் சேர்ந்து படித்துப் பட்டம் பெற்ருர். பின் சட்டக் கல்வி படித்துத் தேர்ந்து இந்தியாவிற்கு வந்தார்.

5. ஜவாஹர் 1916-ம் ஆண்டில் கமலா என்ற அம்மையாரை மணந்துகொண்டார். ஜவாஹர் அளவற்ற தேசப்பற்று உடையவர். 1920-ம் ஆண்டில் நடந்த ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து முதன் முறை சிறை புகுந்தார். அவர் அலாஹாபாத்து நகர சபைத் தலேவராக இருந்து மக்களுக்குப் பல நன்மைகளேச் செய்தார்.

**6.** ஜவாஹர் இந்தியாவில் காங்கிரஸார் நடத்திய பல இயக்கங்களிலும் கலந்துகொண்டு, பலவற்றைத் தாமே தலைமை தாங்கி நடத்தினர். அதனல் அவர் பல முறை சிறைக்குச் சென்ருர். பீஹார் என்னும் இடத்தில் பூகம்பம் உண்டானபோது அவர் மண்வெட்டியையும் கூடையையும் கைக்கொண்டு வேலையாட்களோடு வேலையாளாய்ச் சேர்ந்து உழைத்தார். ஜவாஹரின் மனைவியார் ஐரோப்பாவில் நோயுற்று இறந்தார். ஜவாஹருக்கு '**இந்திரா**' என்னும் ஒரே குமாரத்தி தான் இருக்கிருள்.

**7.** ஜவாஹர் ஐந்து முறை காங்கிரஸ் மகாசபைத் தலைவராக இருந்திருக்கிருர். தேசத்தின் விடுதலைக்காகப் பாடுபட்டு ஒன்பதுமுறை சிறை சென்றிருக்கிருர். அவர் தந்தையார் தம் மாபெரு மாளிகையான **ஆனந்த பவன**'த்தைச் '**சுயராச்சிய பவனம்**' எனப் பெயர் மாற்றி நாட்டுக்கு அளித்துள்ளார். ஜவாஹர் தேசத் தொண்டு புரிந்ததற்காக ஆங்கிலேயரால் பதினேழு ஆண்டுகளுக்கு மேல் சிறைவைக்கப்பட்டார்.

**8.** ஜவாஹர்லால் ஆங்கிலத்தில் சிறந்த முறையில் எழுதவும் பேசவும் வல்லவர். அவர் எழுதும் நூல்களை ஆங்கிலேயரும் விரும்பிப் படிக்கின்றனர். **சுய சரித்திரம், உலக சரித்திரம், இந்திராவுக்கு எழுதிய கடிதங்கள்** முதலான நூல்கள் அவர் எழுதியனவாகும். ஜவாஹர் உலகத்திலுள்ள அரிய பெரிய மனிதர்களோடு நெருங்கிப் பழகி உள்ளார். அவற்ருல் நெஹ்ரூ பேரறிவுடையவராகவும், அரசியல் நிபுணராகவும் விளங்குகிருர்.

9. நெஹ்ரூ அழகிய தோற்றம் உடையவர். அவர் தூய மனம் படைத்தவர். உண்மையைக் கடைப்பிடித்து

ஒழுகுபவர். அவர் எதற்கும் அஞ்சாதவர். தைரியத்தில் அவருக்கு ஒப்பானவர் இக்காலத்தில் நமது நாட்டில் எவரும் இலர் என்றே கூறலாம். தேசப்பற்றில் அவர் ஒப்பு உயர்வு அற்றவர். உயர்ந்த இராசதந்திரமும் சிறந்த அரசியல்அறிவும் வாய்ந்தவர். புகழிற்கு உறை-விடமான ஜவாஹர் நீடு வாழ்ந்து நாட்டிற்கு மேலும் நன்மை பல புரிவாராக!

*அரும்பதங்கள் : கவிஞர், மகாத்மா, புகழ், பிரதமர், நீதி மன்றம், நியாயவாதி, தாதிமார்கள், நாட்டுப்பற்று, கல்லூரி, சட்டக்கல்வி, இயக்கம், நோயுற்று.*

**பயிற்சி**

1. விடை எழுது :

அ. ஜவாஹர்லால் நெஹ்ருவின் தந்தையார் யார்?
ஆ. ஜவாஹரின் சகோதரிகள் யாவர்?
இ. ஜவாஹருக்கு நாட்டுப்பற்றை ஊட்டியவர் யார்?
ஈ. ஜவாஹர், நாட்டுக்குச் செய்த நன்மைகள் யாவை?
உ. ஜவாஹர் இப்போது வகிக்கும் பதவி யாது?

2. எதிர்ப்பதங்கள் எழுது :

சிறந்த ×
பிறப்பு ×
புகழ் ×
சேர்ந்து ×
உயர்வு ×

8. கீழே உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது:

மாணிக்கம் - அழியாப்புகழ் - பின்பற்றி - நீதிமன்றம் - பரீட்சை - இயக்கம் - உழைத்தார் - நிபுணர்.

# 25. மௌனவாசிப்பு III

**கீழே உள்ள கதையை மௌனமாய்ப் படித்து விஞக்களுக்கு விடை எழுது :**

1. ஒரு காட்டின் அருகில் பணக்காரர் ஒருவர் மாளிகை கட்டிக்கொண்டு வசித்து வந்தார். அவர் தினந்தோறும் வேட்டையாடச் செல்வது வழக்கம்.

2. ஒரு நாள் அச்செல்வர் குழந்தையுடனும் நாயுடனும் காட்டுக்குச் சென்ருர். அன்று அவர் குழந்தையையும் நாயையும் ஓரிடத்தில் நிறுத்தி விட்டு வேட்டையாடப் போனர். வேட்டை மேற் சென்ற அவர் நெடுந்தூரம் சென்றுவிட்டார். அப்போது மாலேவேளே; ஆகாயம் இருண்டது; எங்கும் மூடுபனி சூழ்ந்துகொண்டது. செல்வர்க்கு அதுவரையிலும் குழந்தையின் நிணேவே இல்லே. மூடுபனியைக் கண்டதும், அவருக்குக் குழந்தையின் நிணேவு வந்தது. அவர் மிகவும் வேகமாக வந்தும் குழந்தையைக் காண முடியவில்லே. மூடுபனியால் அவர் வழி தவறிவிட்டார். முடிவில் நாயும் குழந்தையும் இல்லாமல் வீடு வந்து சேர்ந்தார். அவரும், மணேவியும், பிறரும் அன்றிரவெல்லாம் மிக வருந்திஞர்கள்.

3. மறுநாள், பொழுது விடிந்தது. செல்வர் வேலேயாட்கள் சிலருடன் குழந்தையைத் தேடப் போனர். அவர் போனதும் நாய் வீட்டுக்கு வந்தது. செல்வரின் மணேவி அந்த நாய்க்குச் சில அப்பத்துண்டுகளேப் போட்டாள். அப்போது நாய் மிகவும் பசியால் வாடி இருந்தது. ஆனுலும் அது அப்பத்துண்டுகளே வாயிற் கௌவிக் கொண்டு வெளியே ஓடிற்று.

4. குழந்தையைத் தேடிச் சென்ற செல்வரும் பிறரும் பல இடங்களில் நாள் முழுவதும் சுற்றித்

திரிந்தும், குழந்தையைக் காணுமல் வீட்டுக்குத் திரும்பிவந்தனர். செல்வரின் மனைவி அடைந்த துன்பத்திற்கு அளவே இல்லை. செல்வரும் அவர் மனைவியும் அன்றிரவு தூங்கவே இல்லை. மறு நாள் காலையில் செல்வர், வேலையாட்கள் சிலருடன் குழந்தையைத் தேடச் சென்ருர். அவர் சென்றதும் நாய் வந்தது. அது மெலிந்திருந்தது. பசியால் அது வாடுகிறது என்பது அதைப் பார்த்த அளவில் தெரிந்தது. அன்று செல்வரின் மனைவி நாயின் நிலையை அறிந்து நாலைந்து ரொட்டித் துண்டுகளைப் போட்டாள். நாய் அவற்றைக் கௌவிக் கொண்டு விரைவாக வீட்டை விட்டு வெளியே ஓடிற்று.

5. அன்று மாலை செல்வரும் வேலையாட்களும் காடெங்கும் தேடித் தேடிக் குழந்தையைக் காணுமல் அலுத்துப்போய் வந்தனர். செல்வரின் மனைவி குழந்தையைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் நாய் வந்து போவதையும், மற்ற நேரங்களில் அதனைப் பார்க்க முடியாதிருத்தலையும் கூறினுள். அதனைக் கேட்ட செல்வர் மறுநாள் நாயோடு செல்வது எனத்தீர்மானித்து மறைந்திருந்தார். நாய் வந்தது. முன்புபோல் அது பசித்திருந்தும் தனக்கிட்ட ரொட்டியைத் தான் தின்னுது வாயிற் கௌவிக் கொண்டு ஓடிற்று. அதனைப் பின்தொடர்ந்து செல்வரும் வேலையாளும் சென்ருர்கள். நாய் ஒரு மலைக்குகையருகிற் சென்றது.

6. செல்வரும் வேலையாளும் அக்குகையை அடைந்தனர். என்ன ஆச்சரியம்! குழந்தையும் நாயும் ரொட்டித் துண்டுகளைத் தின்றுகொண்டிருப்பதைச் செல்வர் கண்டார்; ஓடோடிச் சென்று குழந்தையை வாரி எடுத்துக்கொண்டார். வாலை ஆட்டிக் கொண்டு நின்ற நாயை வேலையாள் எடுத்துக்கொண்டான். பிறகு

செல்வர் குழந்தையோடு வீடு வந்து சேர்ந்தார். செல்வரின் மனைவி மிகவும் சந்தோஷப்பட்டாள். நாய் குழந்தையைக் காத்து வந்த முறையைச் செல்வர் சொல்லக் கேட்டாள். மனம் மகிழ்ந்தாள். அன்று முதல் செல்வரும், அவர் மனைவியும் நாயையும் அருமைக் குழந்தை போல் காத்து வந்தனர். 'நாய் போல் நன்றியுள்ள விலங்கு வேறு உண்டா?'

**வினாக்கள்**

1. *செல்வந்தர் எங்கு வசித்தார்?*
2. *அவர் வேட்டைக்குச் சென்றபோது யாரை அழைத்துக்கொண்டு போனார்?*
3. *செல்வந்தர் குழந்தைக்கு என்ன நேரிட்டது?*
4. *தினந்தோறும் நாய் செய்தது என்ன?*
5. *குழந்தை எங்கிருந்தது?*
6. *நாயின் குணத்தைப்பற்றி நாம் அறிவது யாது?*

## 26. பறவைகள்

1. உலகில் காணப்படும் பலவகை உயிர் இனங்களுள் பறவை இனம் ஒன்று. பறக்கும் தன்மை உடையன எல்லாம் பறவைகள் என்று கூறப்படும். பூமியிலிருந்து மேலே வானில் சஞ்சரிப்பதைப் பறத்தல் என்று கூறுவர். வானில் பறவைகள் பறக்கும்பொழுது பார்த்தால், மிகவும் விந்தையாகவும், அழகாகவும் இருக்கும். எவ்வாறு அவை அந்தரத்தில் ஆதாரம் இன்றிப் பறக்கின்றன என்று சிந்தித்துப் பாருங்கள். பறவைகள் தம் இரு பக்கங்களிலும் உள்ள இறக்கைகளைப் புடைத்தலால் பறக்கின்றன. அவைகளின் உடல் பறப்பதற்கு ஏற்றவாறு இலேசாக அமைந்திருக்கின்றது. பருத்த உடல்களைப் பெற்றிருக்கும் பறவைகள் வெகு தூரம் பறக்க முடியாது.

2. பறவைகளின் இறகுகளை உற்று நோக்குங்கள். இறகுகள் பல ஒன்ருேடு ஒன்று இணைந்து நின்று இறக்கையாக அமைந்திருக்கின்றன. இறக்கையைச் சிறகு என்றும் கூறுவதுண்டு. அச்சிறகுகள் பறவை உடலின் இருபுறங்களிலும் அமைந்துள்ளன.பறவைகள் பறக்க எழும் காலத்தில் இறக்கையை விரித்துப்புடைக்கும். அவ்வாறு புடைப்பதாலும் அதன் உடல் இலேசாக இருத்தலாலும் அது மேலே எழும். அப்பொழுது பறந்து செல்வது எளிதாகும். அந்த இறக்கைகள் மற்ருெரு வகையிலும் பறவைகளுக்குப் பயன்படுகின்றன. பற-



வாத காலங்களில் இறக்கைகள் உடலோடு குவிந்து ஒடுங்குதலால் பனி, வெயில், குளிர் முதலியவற்ருல் அதன் உடலுக்குத் துன்பம் உண்டாகாதபடி காக்கின்றன.

3. பறவைகளின் கால்களில் விரல்கள் உள்ளன. அவை மரக்கிளைகளில் அமர்வதற்கு ஏற்றவாறு நுனி வளைந்து அமைந்துள்ளன. அவைகளின் நுனியில் கூர்மையான நகங்கள் உண்டு. அக்கால்கள் மிக்க வலிமையுடையனவாகும். இராசாளி, கழுகு, பருந்து, கருடன் என்பன ஓர் இனத்தைச் சேர்ந்தவை. அவற்றுள் இராசாளி என்பது ஓர் ஆட்டுக் குட்டியையும் காலிலேயே தூக்கிக் கொண்டு, மிக்க உயரத்தில் பறந்து செல்லும் ஆற்றல் உடையது.

4. பறவைகளின் மூக்கிற்கு அலகு என்பது பெயர். அவை வெவ்வேறு வகையாக அமைந்திருப்பதைக் காணலாம். அவை மாமிசத்தைக் குத்தித்தின்பதற்கும், கொட்டைகளை உடைத்துத் தின்பதற்கும் ஏற்ற வாறு அமைந்துள்ளன. பறவைகளின் அலகில் இரு துவாரங்கள் இருக்கும். அவை மூக்கைப்போலப் பயன்படுகின்றன. பறவைகளுக்கு நாக்கு என்னும் உறுப்பும் உண்டு. பறவைகளின் கண்கள் சிறியவையாயினும் கூரிய பார்வை உண்டு. சில பறவைகளுக்குப்





பகலில் கண் தெரியாது. அவற்றுள் ஆந்தை ஒன்று. அதற்கு இரவில் கண் நன்ருகத் தெரியும். பறவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொறிக்கும். வௌவால் என்னும் பறவை மட்டும் மிருகத்தைப்போலக் குட்டி போடும் தன்மையுடையது. வௌவால் மரக் கிளைகளில் தலைகீழாகத் தொங்கும்.

5. சில பறவைகள் மரங்களில் கூடு கட்டி வாழும். இராசாளி, கழுகு போன்ற சில பறவைகள் மலைகளில் உச்சியில் யாரும் செல்லமுடியாத இடத்தில் கூடுகட்டி வாழும். சில பறவைகள் மரப் பொந்துகளில் வாழும். கூடுகளும் பல வகையாக இருக்கும். சில பறவைகள் நீரிலும் நிலத்திலும் வாழும்.

**6.** கழுகு, ஆந்தை, கோட்டான், பருந்து, கருடன், புறு, காகம், சிட்டுக்குருவி, உள்ளான், மைனு, கௌதாரி, மயில், குயில், கிளி, கோழி, வாத்து, நாரை, கொக்கு, தீப்பறவை முதலியன வெவ்வேறு வகை யானவை. பறவைகளுள் மிகப்பெரியது தீப்பறவை. அது ஓர் ஆள் உயரம் இருக்கும்; குதிரையைவிட வேகமாக ஓடும். ஆனல் அது தன் பருத்த உடலைத் தூக்கிக் கொண்டு பறக்க முடியாது.

*அரும்பதங்கள் : உயிரினம், தன்மை, விந்தை, அந்தரம், ஆதாரம், சிந்தித்து, புடைத்தல், அமைந்திருக்கின்றன, உற்றுநோக்கு, இணைந்து, எளிது.*

**பயிற்சி**

1. *விடை எழுது :*

   அ. *எவை பறவை என்று கூறப்படும்?*
   ஆ. *பறவை எவ்வாறு பறக்கிறது?*
   இ. *இறக்கைகளால் பறவைக்கு என்ன பயன்?*
   ஈ. *எந்தப் பறவைக்குப் பகலில் கண் தெரியாது?*
   உ. *வௌவாலைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?*
   ஊ. *பறவைகளில் மிகப் பெரியது எது?*

2. *கோடுள்ள இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்பு :*

   அ. *பறக்கும்———உடையது பறவை. (சக்தி, வழக்கம், தன்மை)*
   ஆ. *பறவைகள் இறக்கைகளைப்———பறக்கின்றன. (தூக்குவதால், இறக்குவதால், புடைப்பதால்)*
   இ. *பறவையின் விரல்களின்———கூர்மையான நகங்கள் உண்டு. (நடுவில், நுனியில், அடியில்)*
   ஈ. *பறவைக்கு நாக்கு என்னும்———உண்டு. (பாகம், பகுதி, உறுப்பு)*
   உ. *தீப்பறவை ஓர் ஆள்———இருக்கும். (மட்டம், உயரம், அளவு.)*

3. *கீழே உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுதுக:*

   *இனம் – சஞ்சரித்து – வானில் – சிந்தித்து – புடைத்தல் – உற்றுநோக்கு – எளிது – பயன்.*



# 27. தாமஸ் ஆல்வா எடிஸன்

1. இக்காலத்தில் நாம் பற்பல வசதிகளைப் பெற்று வாழ்கிறோம். மின்சாரம் நம் வாழ்க்கையில் பலவகையில் பயன்படுகிறது. மின்சார விளக்கு இருளை நீக்கிப் பளிச்சென்று வெளிச்சம் தருகிறது. ரேடியோ மூலம் பாட்டுக்களைக் கேட்கிறோம். மின்சாரத்தால் வண்டி ஓடுகிறது. இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் இத்தகைய நலங்களைப் பெறவில்லை. இவற்றை யெல்லாம் நமக்குத் தேடித்தந்தவர் யார்? அவரைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டாவா?

2. இவற்றை எல்லாம் நமக்குத் தேடித்தந்த விஞ்ஞானி **தாமஸ் ஆல்வா எடிஸன்** என்பவர் ஆவர். அவர் 1847-ம் ஆண்டு அமெரிக்காவில் ஓகியோ ஜில்லாவில் மிலான் என்ற ஊரில் பிறந்தார். அவருடைய தந்தையார் **சாமுவேல் எடிஸன்** என்பவர் ஆவர். தாயார் **நான்ஸி எலியட்டு** என்பவர். அவர்கள் ஏழைக்-

குடும்பத்தினரே. தாமஸ் ஆல்வா எடிஸன் தம் தாயாரிடமே கல்வி கற்ருர். அவருக்கு எதனையும் கூர்ந்து பார்த்து, ஆராயும் அறிவு, இளமையிலேயே இருந்தது. அவர் சிறுவராயிருந்த பொழுது செய்த செயல்கள் அவரது பேரறிவை விளக்குவனவாயிருந்தன.

3. அவர் தம் தாயாரிடம் கற்ற கல்வியை விருத்தி செய்துகொண்டார். விஞ்ஞான நூல்களையும் இரஸாயன நூல்களையும் அவர் விரும்பிப் படித்தார். ஏழைக் குடும்பத்தில் பிறந்ததனுல், இளமையில் இரயிலில் பத்திரிகைவிற்கும் தொழிலைச்செய்தார். பின் அவர், தாமே செய்திகளை அச்சடித்து விற்றுப் பொருள் திரட்டத் தொடங்கினுர். இரயில் வண்டியில் ஓய்வு நேரத்தில் ஆராய்ச்சி செய்வார். ஒரு சமயம் அவர் ஆராய்ச்சிக்கு வைத்திருந்த தீப்பாஷாணம் கீழே சிந்தியதால் வண்டியில் தீப் பிடித்துக்கொண்டது. அச்சமயம் அங்கிருந்தவர் அடித்ததால், அவருடைய காது செவிடாகி விட்டது.

4. ஒரு நாள் ஒரு தந்திக் குமாஸ்தாவின் குழந்தையை எடிஸன் ஆபத்தினின்றும் காப்பாற்றினுர். அதனுல் அத்தந்திக்குமாஸ்தா அவருக்குத் தந்தியடித்தலைக் கற்பித்தார். பத்து நாட்களில் அதனைக் கற்றுக்கொண்ட எடிஸன், தந்தியடிக்கும் முறையில் பல திருத்தங்களை அமைத்தார். வாக்குரிமைச் சீட்டுக்களை எண்ணும் இயந்திரத்தையும், மற்றும் பல இயந்திரங்களையும் எடிஸன் கண்டுபிடித்தார். அதனுல் அவருக்கு நாற்பதினுயிரம் டாலர் கிடைத்தது. அதனைக் கொண்டு அவர் இரண்டு கம்பெனிகளை ஏற்படுத்தினுர். கம்பெனி என்பது வாணிகக் கழகம். அக்கம்பெனியில் தொழில் புரிந்து வந்த ஸ்டில்வெல் என்ற அம்மையாரை எடிஸன் மணந்துகொண்டார். அவ்வம்மையார் மண

மான ஒன்பது ஆண்டுகளுக்குள் மூன்று மைந்தர்களைப் பெற்றுவிட்டு இறந்து போனார்.

5. எடிஸன் டெலிபோன், கிராமபோன், திரைப் படக் காட்சி முதலானவற்றைக் கண்டுபிடித்தார். எடிஸன் தம் வாழ்நாளில் எண்ணற்ற பல புதிய பொருள்களைக் கண்டுபிடித்து நமக்கு அளித்துள்ளார். உலக நன்மையைக் கருதிச் செய்த அவரது செயலை வியந்து பாராட்டி ரஷ்யா, பிரான்ஸ், அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் தங்கப் பதக்கங்களையும் பரிசுகளையும் அவருக்கு அளித்துப் பெருமைப்படுத்தின. அவர் வாழ்ந்த மாளிகை நியூஜெர்ஸியிலுள்ள ஆரஞ்சு மலையின் அடிவாரத்தில் உள்ளது. அம் மாளிகையில் அவர் வேலை செய்த இடம், புத்தக நிலையம், காட்சிப் பொருள்கள் முதலியன எல்லாம் இன்றும் உள்ளன. எடிஸன் 1931-ம் ஆண்டு தமது எண்பத்து நான்காம் வயதில் இறந்தார். அவர் நமக்குக் கூறும் அறிவுரையைக் கவனிப்போம் : "ஏழையாகப் பிறந்ததற்காக எவரும் கவலைப்பட வேண்டுவது இல்லை. நான் ஏழையாகத்தான் பிறந்தேன் ; படித்துப் படித்துச் சிறந்த நிலையை அடைந்தேன் ; நீங்களும் படித்துப் படித்து முன்னேறுங்கள். அறிவை விருத்தி செய்து கொள்ளுங்கள் ; சிந்திக்கும் திறமையைப் பெறுங்கள்; உழைப்பைக் கைக்கொள்ளுங்கள் ; தன்னம்பிக்கையுடன் இருங்கள் ; செய்யும் காரியங்களில் பல முறை தோல்வியை அடைந்தாலும் தன்னம்பிக்கையும், விடா முயற்சியும் கொண்டு உழையுங்கள் ; வெற்றி பெறுவது உறுதி. உங்கள் உழைப்பினால் நீங்கள் உயர்வை அடைந்து, நாட்டுக்கும் பெருமையைத் தேடிக் கொடுங்கள்." இவற்றை நாம் அமுத மொழிகளாகக் கொண்டு இவற்றின்படி நடக்க முயன்றால், நாமும் நம் நாடும் முன்னேற்றமடைவது உறுதி.

**அரும்பதங்கள் : மின்சாரம், இருள், ரேடியோ, நலங்கள், விஞ்ஞானி, ஆராய்ச்சி, திரட்ட, வாக்குரிமை, கம்பெனி, மணந்தார், டெலிபோன், கிராமபோன், பாராட்டி.**

### பயிற்சி

1. விடை எழுதுக:

அ. எடிசன் என்பவர் யார்?
ஆ. அவர் எங்கே பிறந்தார்?
இ. அவர் இளமை பற்றி நீ அறிந்தது யாது?
ஈ. எடிசன் உலகத்துக்குச் செய்த நன்மைகள் யாவை?

2. கீழ் வரும் சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது:

வசதிகள் – நூற்றுண்டு – நலங்கள் – விஞ்ஞானி – குடும்பம் – ஆராய்ச்சி – பொருள் திரட்டு.

8. கீழ் வரும் குறை வாக்கியங்களைப் பூர்த்தி செய்க:

அ. இக்காலத்தில் நாம் பற்பல வசதிகளைப் ———.
ஆ. முற்காலத்தவர் இத்தகைய நலங்களை ———.
இ. இவற்றையெல்லாம் நமக்குத் தேடித் தந்த விஞ்ஞானி ———.
ஈ. எடிசன் தம் தாயாரிடமே ———.

# 29. நாட்டுப் பொது வாழ்த்து

ஜன கண மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா !
பஞ்சாப ஸிந்து குஜராத மராதா
திராவிட உத்கல வங்கா,
விந்திய ஹிமாசல யமுனு கங்கா
உத்சல ஜலதி தரங்கா,
தவ ஸுப னுமே ஜாகே தவசுப
ஆசிஷ மாங்கே காஹே தவஜய காதா
ஜனகண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா !
ஜயஹே ஜயஹே ஜயஹே !
ஜய ஜய ஜய ஜயஹே !

### பொருள்

மக்களின் உள்ளத்தில் உறையும் பாரதத்தின் பெரும் பேற்றிற்கு முதல்வனுய் உள்ள ஆதி இறைவனே ! வெற்றி யுண்டாகட்டும் ! பஞ்சாப், சிந்து, குஜராத்தி, மராத்தி, திராவிடம், உத்கலம் (ஒரிஸா), வங்காளம், விந்தியம் முதலிய நாடுகளேயும், இமயமலேயையும், யமுனே, கங்கை முதலிய பொங்கும் அலேகளுடன் பொலிவுறும் யாறுகளேயும் கொண்ட உனது மங்கலம் மிகுந்த பெயரைக் கூறி, உனது மங்கல மளிக்கவல்ல ஆசியை வேண்டுகிறேம்.

உன்னுடைய வெற்றியைப் பாடுகிறேம் ! மக்களின் மங்கல நல்வாழ்வை நல்கும் இறைவனே ! பாரதத்தின் ஆதி முதல்வனே, உனக்கு வெற்றியுண்டாகுக !

வெற்றி ! வெற்றி ! வெற்றி !

# செய்யுட்பாடங்கள்

## 1. கடவுள் வணக்கம்

வாக்குண்டாம், நல்ல மனமுண்டாம், மாமலராள்
நோக்குண்டாம், மேனி நுடங்காது;—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு. 1

வெள்ளைக் கலையுடுத்து, வெள்ளைப் பணிபூண்டு,
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்;—வெள்ளை
அரியா சனத்தில் அரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய். 2

**குறிப்புரை :**

1. வாக்குண்டாம் - வாக்கு+உண்டாம், பேசும் திறமை உண்டாகும்; மாமலராள் - சரசுவதி; துப்பார் – (துப்பு+ஆர்) துப்பு – பவழ நிறம், ஆர் – பொருந்திய; தும்பிக்கையான் – விநாயகர் ; சார்வார் – அடைபவர்.

2. கலை – ஆடை; பணி – ஆபரணம்; கமலம் – தாமரை; அரியாசனம் – சிங்காதனம்;

## 2. மூதுரை

நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா;—நின்று,
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால். 1

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே;—அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நேர். 2

அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா;—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா. 3

நீரளவே ஆகுமாம் நீராம்பல்; தான்கற்ற
நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு;—மேலைத்
தவத்தளவே ஆகுமாம் தான்பெற்ற செல்வம்;
குலத்தளவே ஆகும் குணம். 4

நல்லாரைக் காண்பதுவும் நன்றே ; நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே ;—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே ; அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று. 5

தீயாரைக் காண்பதுவும் தீதே; திருவற்ற
தீயார்சொல் கேட்பதுவும் தீதே;—தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே ; அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீது. 6

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்;—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல், அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை. 7

பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம்;—கொண்டபேர்
ஆற்ற லுடையார்க்கும் ஆகா(து) அளவின்றி
ஏற்ற கருமஞ் செயல். 8

மடல்பெரிது தாழை மகிழ்இனிது கந்தம்
உடல்சிறியர் என்றிருக்க வேண்டா;—கடல்பெரிது
மண்ணீரும் ஆகா(து); அதனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும். 9

சீரியர் கெட்டாலும் சீரியரே ; சீரியர் மற்(று)
அல்லாதார் கெட்டாலங் கென்னாகும்?—சீரிய
பொன்னின் குடமுடைந்தால் பொன்னாகும்; என்னாகும்
மண்ணின் குடமுடைந்தக் கால்? 10

குறிப்புரை :

1. நன்றி – உதவி; தாளுண்ட நீர் – வேரினால் கிரகித்து உண்ட நீர் ;

2. ஈரம் இல்லா – அன்பில்லாத ; ஈந்த – செய்த: நேர் – ஒப்பாகும்.

3. எடுத்த – மேற்கொண்ட; கருமங்கள் – வேலைகள்; தொடுத்த – கிளைத்த; பழா – பழுக்கமாட்டா.

4. நீர் ஆம்பல் – நீரில் இருக்கும் அல்லியின் கொடி; மேலை – சிறப்பு.

5. நலம் மிக்க – நற்குணம் மிகுந்த; இணங்கி – சேர்ந்து;

6. தியார் – கொடியவர்; திரு அற்ற – நற்குண நற்செயல் இல்லா.

7. பொசியும் – உணவு கொடுக்கும்; தொல்உலகில் – பழமையான உலகில்.

8. பண்டு – முற்பட்ட; விண்டு – பிரிந்து; பேர் ஆற்றல் – மிக்க திறமை ; ஏற்ற கருமம் – மேற்கொண்ட செயல்.

9. மடல் – இதழ்; மண்ணீர் – உடம்பைக் கழுவும் நீர்; சிற்றூறல் – சிறு பள்ளத்தினின்று சுரக்கும் நீர்.

10 . சீரியர் – உயர்ந்தவர்; சீரியர் மற்று அல்லாதார் – தாழ் குணம் உள்ளவர்.

## 3. நல்வழி

வருந்தி அழைத்தாலும் வாராத வாரா ;
பொருந்துவன போமினென்றாற் போகா;–இருந்தேங்கி
நெஞ்சம்புண் ணாக நெடுந்தூரம் தாம்நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். 1

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்;—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து, 2

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ? மாநிலத்தீர்!—வேண்டா ;
நமக்கும் அதுவழியே ; நாம்போம் அளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும். 3

ஆற்றங் கரையின் மரமும், அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே!—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை; கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. 4

சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல் கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்–போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம். 5

நீரும் நிழலும் நிலம்பொதியும் நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும்—ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றும்
தருஞ்சிவந்த தாமரையாள் தான். 6

நீறில்லா நெற்றிபாழ் ; நெய்யில்லா உண்டிபாழ் ;
ஆறில்லா ஊருக்(கு) அழகுபாழ் ;—மாறில்
உடன்பிறப் பில்லா உடம்பு பாழ் ; பாழே
மடக்கொடி இல்லா மனை. 7

உண்பது நாழி; உடுப்பது நான்கு முழம்;
எண்பது கோடிநினைந் தெண்ணுவன ;—கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்தனையும் சஞ்சலமே தான். 8

கல்லானே ஆனாலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர் ;—இல்லானை
இல்லாளும் வேண்டாள்; மற்(று) ஈன்றெடுத்த தாய்வேண்
[டாள்;
செல்லா தவன்வாயிற் சொல். 9

ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட்(டு) ஒன்றாகும்;
அன்றி அதுவரினும் வந்தெய்தும்;—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல். 10

குறிப்புரை :

1. பொருந்துவன – (தாமே) வந்து அடையக்கூடியவை; ஏங்கி – வருந்தி; நெடுந்தூரம் – பலவகையாக அல்லது நெடு நாள்; துஞ்சுவது – இறப்பது.

2. பெருக்கு – வெள்ள நீர்; அற்று – நீங்கி; நல்கூர்ந்தார் ஆனாலும் – வறியவர்களானாலும்; ஏற்றவர்க்கு - பிச்சை கேட்டவர்க்கு; இசைந்து – மனம் ஒப்பி.

3. மாநிலத்திர் – உலகத்தில் வாழும் மக்களே, அதுவழியே– நேரத்தக்கது அதுவே; எமக்கென்னென்றிட்டுண்டிரும் - எமக்கு + என் + என்று + இட்டு + உண்டு + இரும்.

4. விழுமன்றே – விழும் + அன்று + ஏ; விழும் – அழியும்; ஏற்றம் – பெருமையோடு; கண்டீர் – அறிவீர்; பழுதுண்டு – அழிவு உண்டு; பணி – தொழில்.

5. சேவித்தும் – (பிறர்க்கு) ஊழியம் செய்தும்; பாவித்தும் –(உயர்ந்தவராக) கருதியும்; போவிப்பம் – அழிவோம்; பாழின் உடம்பு – அழியக்கூடிய உடம்பு.

6. நிலம் பொதியும் – நிலத்திற் பொருந்தியிருக்கும்; வருந்திரு – இடைவிடாது வளரும் செல்வம்; தரும் – கொடுப்பாள்; சிவந்த தாமரையாள் – இலக்குமி.

7. நீரில்லா – (நீறு + இல்லா) விபூதி இல்லாத; உண்டி – உணவு; மாறில் – மாறுபாடு இல்லாத; உடன்பிறப்பு – சகோதரர்; மடக்கொடி – மடப்பம் பொருந்திய கொடி போன்ற சாயலை யுடைய பெண்.

8. நாழி – ஒரு முகத்தல் அளவை; எண்ணுவன – எண்ணங்கள்; கண் புதைந்த – கண்மூடித்தனமாக; மண்ணின் கலம் – மண்ணால் செய்யப்பட்ட பாண்டம்; சாந்தனையும் – இறக்கும் வரையில்; சஞ்சலம் – துன்பம்.

9. பொருள் – செல்வம்; எதிர்கொள்வர் – மரியாதை செய்வர்; இல்லானை – செல்வம் இல்லாதவனை; இல்லாள் – மனைவி; ஈன்று எடுத்த – பெற்று வளர்த்த; செல்லாது – மதிக்கப்பட மாட்டாது.

10. எய்தும் – அடையும் அல்லது சேரும்;

## குறத்தி பாட்டு

என்றனது திருநாடு கேட்கிறையோ தம்பீ !
ஏற்றமுள்ள இந்திரனார் ஆளுமெங்கள் நாடு ;
சந்திரர்கள் சூரியர்கள் தவம்புரியும் நாடு ;
தவமுனிவர் ரிஷிகளெல்லாம் வாழுமெங்கள் நாடு ;
கொச்சிமலை குடகுமலை எங்களது நாடு ;
குமரேசர் வாழுவதும் எங்களது நாடு ;
பச்சைமலை பவளமலை எங்களது நாடு ;
பரமசிவன் வாழுவதும் எங்களது நாடு ;
வங்காளம் சிங்காளம் மகதமெங்கள் நாடு ;
வளம்பாடி குறியுரைக்க வந்தேனடா தம்பீ !

## விவேக சிந்தாமணி

ஆபத்துக் குதவாப் பிள்ளை,
அரும்பசிக்(கு), உதவா அன்னம்,
தாபத்தைத் தீராத் தண்ணீர்,
தரித்திரம் அறியாப் பெண்டிர்,
கோபத்தை அடக்கா வேந்தன்,
குருமொழி கொள்ளாச் சீடன்,
பாபத்தைத் தீராத் தீர்த்தம்
பயனிலை ஏழுந் தானே. 1

தண்டா மரையின் உடன்பிறந்தும்
தண்தேன் நுகரா மண்டூகம் ;
வண்டே கானத் திடையிருந்தும்
வந்தே கமல மதுவுண்ணும்.
பண்டே பழகி இருந்தாலும்
அறியார் புல்லர் நல்லோரை ;
கண்டே களித்தங் குறவாடித்
தம்மிற் கலப்பர் கற்றூரே. 2

வானரம் மழைதனில் நனையத் தூக்கணம்
தான்ஒரு நெறிசொலத் தாண்டிப் பிய்த்திடும் ;
ஞானமும் கல்வியும் நவின்ற நூல்களும்
ஈனருக் குரைத்திடில் இடர தாகுமே. 3

**குறிப்புரை** :

1. தாபம்-தாகம்; பெண்டிர்-மனைவி; வேந்தன்-அரசன்; கொள்ளா-ஏற்றுக்கொள்ளாத.

2. தண்டாமரை-(தண்மை+தாமரை) குளிர்ச்சி பொருந்திய தாமரை; நுகரா-அருந்ாது; மண்டுகம்-தவளை; கானம்-காடு; கமலம்-தாமரை; மது தேன்; பண்டே-பழமையாக; புல்லர்-அற்பர்; உறவாடி-நட்புக்கொண்டு.

3. வானரம்-குரங்கு; தூக்கணம்-தூக்கணங் குருவி: நெறி-நீதி; நவின்ற-கற்ற; ஈனர்-அற்பர்; இடர்-துன்பம்.